தினமலர்
உண்மையின் உரைகல்
நிறுவனர் டி.வி. ராமசுப்பையர்

## தனியார் ஆலை நிர்வாகங்கள்...அடாவடி : கரும்பு விவசாயிகள் பரிதவிப்பு

கடலூர்: மாவட்டத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகள், அரசு அறிவித்த தொகையை வழங்காமல் காலம் கடத்தி வருவதால் கரும்பு விவசாயிகள் செய்வதறியாமல் தவித்து வருகின்றனர்.

விவசாயமே பிரதான தொழிலாகக் கொண்ட கடலூர் மாவட்டத்தில் நெல் அதிகளவில் பயிரிடப்படுகிறது. ஆண்டுதோறும் ஏற்படும் இயற்கை சீற்றம் மற்றும் நோய் தாக்குதலால் மகசூல் குறைவு மற்றும் நெல்லுக்கு போதிய விலை கிடைக்காததால், தொடர் நஷ்டத்திற்கு ஆளாகிய விவசாயிகள் மாற்றுப் பயிருக்கு மாறி வருகின்றனர். அதனையொட்டி 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஓராண்டு பணப் பயிரான கரும்பு பயிருக்கு மாறியுள்ளனர். மாவட்டத்தில் கடந்த 2011-12 ஆண்டு 90 ஆயிரத்து 145 ஏக்கரிலும், கடந்த 2012-13ம் ஆண்டு 81 ஆயிரத்து 367 ஏக்கரிலும் கரும்பு பயிரிடப்பட்டது.

கடந்தாண்டிற்கு கரும்பு டன் ஒன்றுக்கு ஆதார விலையாக மத்திய அரசு 2,100 ரூபாயும், மாநில அரசு பரிந்துரை விலையாக வாகன வாடகை 100 ரூபாய் உட்பட 450 ரூபாய் அறிவித்தது. அதன்படி ஆலை நிர்வாகங்கள் டன் ஒன்றுக்கு 2,550 ரூபாய் வழங்க வேண்டும். அதன்படி, மாவட்டத்தில் சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே., கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் மட்டுமே அரசு அறிவித்த தொகையை வழங்கி வருகிறது. மற்ற மூன்று தனியார் சர்க்கரை ஆலைகளில் இ.ஐ.டி., பாரி நிறுவனம் டன் ஒன்றுக்கு 2,250 ரூபாயும், இறையூர் அம்பிகா மற்றும் ஏ.சித்தூர் ஆரூரான் ஆலை நிர்வாகங்கள் 2,100 ரூபாய் மட்டுமே வழங்கி வருகிறது.

மூன்று தனியார் ஆலை நிர்வாகங்களும் 100 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்காமல் காலம் கடத்தி வருகிறது. இதனைக் கண்டித்து கரும்பு விவசாயிகள் தொடர் போராட்டம் நடத்தி

வருகின்றனர். இந்த நிலையில், இ.ஐ.டி. பாரி மற்றும் ஏ.சித்தூர் ஆரூரான் ஆலைகளில் ஜூன் மாதம் துவங்கும் சிறப்பு அறவைப் பருவத்திற்காக 20 ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இ.ஐ.டி., பாரி நிறுவனம் மட்டும் கடந்த வாரம் அறவையை துவங்கியுள்ளது. ஆரூரான் ஆலையில் இன்னும் துவங்கவில்லை. ஓராண்டு பயிரான கரும்பு உரிய நேரத்தில் அறுவடை செய்யவில்லையெனில், பூ பூத்து எடை குறைவு ஏற்படுவதோடு, பிழிதிறனும் குறைந்து பெரும் நஷ்டம் ஏற்படும் என்பதால், கரும்பு விவசாயிகள் செய்வதறியாமல் பரிதவித்து வருகின்றனர்.

## 50 சதவீதத்திற்கு மேல் மகசூல் பாதித்த விளைநிலங்கள் கணக்கெடுப்பு

ராமநாதபுரம்:ராமநாதபுரத்தில் நடப்பாண்டில் 50 சதவீதத்திற்கு மேல் மகசூல் பாதித்த விளைநில விபரங்கள் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் நந்தக்குமார் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., விஸ்வநாதன், வேளாண் <இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தனர். விவசாயிகள் பேசியதாவது:பாலகிருஷ்ணன், சோழந்தூர்: 2013-14ம் ஆண்டில் வறட்சி பாதித்த விவசாயிகளுக்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், பயிர் காப்பீடு நிதி விபரம் குறித்து விளக்க வேண்டும்.சுந்தர்ராஜன், ராமநாதபுரம்: கூட்டுறவு சங்க நிர்வாகிகளின் காழ்ப்புணர்ச்சியால், பயிர் காப்பீடு நிதி உண்மை விவசாயிகளுக்கு தடைபடுவதை தடுக்க வேண்டும்.

மதுரை வீரன், பரமக்குடி: சாகுபடி பாதித்த விவசாயிகளிடம் தற்போது நில வரி வசூலிக்கப்படுவதால், பயிர் காப்பீடு கிடைக்காமல் போய்விடும் என அச்சம் எழுந்துள்ளது.
காந்தி, ராமநாதபுரம்: 2012-13ம் ஆண்டில் பயிர் காப்பீடு கிடைக்கப் பெறாதவர்களுக்கு, தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கண்ணப்பன், பரமக்குடி: மிளகாய், பருத்தி கொள்முதல் செய்யும் போது 10 சதவீதம் கமிஷன் பிடித்தம் செய்யப்படுவதால் விவசாயிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதை தடுக்க வேண்டும். இவ்வாறு பேசினர். கலெக்டர்: நடப்பாண்டில் சாகுபடியில் 50 சதவீதத்திற்கு மேல் மகசூல் பாதித்த விளைநிலங்கள் குறித்து மாநில நிர்வாக ஆணையர், பேரிடர் தடுப்பு தணிக்கை குழுவுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. கடந்தாண்டு பயிர் காப்பீடு பெறாதவர்களின் நிதி அரசுக்கு திரும்ப அனுப்பப்பட்டுள்ளது. மிளகாய், பருத்தி கொள்முதலின் போது கூடுதல் கமிஷன் பிடிக்கும் தனியார் ஏஜன்சிகள் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

டி.ஆர்.ஓ: விவசாயிகளிடம் தற்போது நில வரி தான் வசூலிக்கப்படுகிறது. மகசூல் வரியல்ல. பயிர் காப்பீடு கிடைக்காதென்ற அச்சம் தேவையில்லை. இவ்வாறு பேசினார்.

கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கனகராஜன், வேளாண் துறை தொடர்பு அலுவலர் ஷேக் அப்துல்லா, வேளாண் துணை இயக்குனர் கமாலுதீன், பொது பணித்துறை செயற்பொறியாளர் ராமச்சந்திரன், நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி அலுவலர் மதியழகன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## வறட்சி குறித்து வெள்ளை அறிக்கை'விவசாயிகள் வலியுறுத்தல்

மதுரை:'மதுரை மாவட்டத்தில் வறட்சி குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்' என, விவசாயிகள் வலியுறுத்தினர்.மதுரை விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:விவசாயி: தென்னை, மா மரங்கள் நிவாரணத்திற்காக, வி.ஏ.ஓ.,க்கள் கணக்கெடுப்பு நடத்தவில்லை.கலெக்டர் சுப்ரமணியன்: தென்னை, மா குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பி, விரைவில் நிவாரணம் பெறப்படும். கணக்கெடுப்பில் விடுபட்டு இருந்தால் நடவடிக்கை எடுப்போம்.விவசாயி: மதுரையை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்கிறபோது, சோழவந்தான் பகுதியில் சாகுபடி நடந்ததாக கூறுகிறீர்கள்.

மேலூர் பகுதியை வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டும். அவர்களின் விவசாய கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். வறட்சி குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

கலெக்டர்: பல மாதங்களுக்கு முன் தண்ணீர் வந்தபோது கூறியதை இப்போது ஒப்பிட்டு கூறக்கூடாது. இந்த ஆண்டு வைகையில் 1500 மி.க.அ., தண்ணீர்தான் உள்ளது. கடந்த ஆண்டு இதேநாளில் 5479 மி.க.அடி தண்ணீர் இருந்தது. எனவே இப்பிரச்னையை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். அரசுதான் அறிவிக்க வேண்டும். தென்னை சாகுபடி உட்பட அனைத்து மரங்கள் பாதிப்பு குறித்தும் விவசாய அதிகாரி மதுரை வந்தபோது கூறி நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

விவசாயி: இந்த ஆண்டு தென்னை பாதிப்பு குறித்து கணக்கெடுக்கவில்லை. அனைவரும் இதே கோரிக்கையுடன்தான் வந்துள்ளோம்.இணைஇயக்குனர் ஜெய்சிங்ஞானதுரை: தென்னை சாகுபடி குறித்து கணக்கெடுப்பு சில நாட்களில் முடிவடையும். விடுபட்டதை தெரிவித்தால் சேர்த்துக் கொள்ளப்படும்.விவசாயி: வாடிப்பட்டி, பாலமேடு பகுதியை வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டும்.தோட்டக்கலை அதிகாரி: கொட்டாம்பட்டி யூனியனில் கொடுக்கம்பட்டியில் 13 விவசாயிகளின் 613 மரங்கள், சேக்கப்பட்டியில் 160 விவசாயிகளின் 3 ஆயிரம் மரங்கள், பள்ளப்பட்டியில் 9 விவசாயிகளின் 403 மரங்கள், சூரப்பட்டியில் 5 விவசாயிகளின் 121 மரங்கள் உட்பட பல பகுதியிலும் கணக்கெடுப்பு மேலூர் தாசில்தாரின் ஒத்துழைப்புடன் நடந்துள்ளது.

விவசாயி: இந்த ஆண்டு 7 லட்சம் மரங்கள் பாதித்துள்ளன. கொட்டாம்பட்டியில் அதிகம் பாதித்துள்ளது.கலெக்டர்: கணக்கெடுப்பு பணி இன்னும் முடியவில்லை, நடந்து வருகிறது.விவசாயி: கடந்த ஆண்டுதான் எடுத்தனர். இந்த ஆண்டு கணக்கெடுப்பு நடத்தவில்லை.கலெக்டர்: கடந்த ஆண்டு மாமரம்

கணக்கெடுக்கவில்லை. இந்த ஆண்டுதான் எடுக்கின்றனர். இவ்வாறு விவாதம் நடந்தது.

## 500 ஹெக்டரில் சோளம் செயல்விளக்கத் திடல் : விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் தகவல்

கரூர்: கரூர் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடந்தது.

இக்கூட்டத்தில், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள, அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, கலெக்டர் பேசியதாவது:

கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு, 652.2 மி.மீ., ஆகும். 2014ம் ஆண்டு ஜூலை முடிய கிடைக்க வேண்டிய சராசாரி மழையான, 194.3 மி.மீ.,க்கு, இதுவரை 139.8 மி.மீ., மழை மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது. அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும், சம்பா பருவத்திற்கேற்ற சான்று பெற்ற நெல் ரக விதைகளான, ஐ.ஆர் 20, பி.பி.டி-5204, கோ-50, ஏ.டி.டி-39, ஏ.டி.டி-43 மேம்படுத்தப்பட்ட வெள்ளைப்பொன்னி ஆகியவைகள், 210 மெ.டன் இருப்பிலுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், நெல் விதைகள் கிலோ ஒன்றுக்கு, 10 ரூபாய் மானியத்தில், விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகிறது. பயறுவகை விதைகளான கோ(ஆர்.ஜி.,)-7, எல்.ஆர்;.ஜி-41, பி.எல்-880இ ஆகிய துவரை ரகங்களும், வம்பன்-3, வம்பன்-4, வம்பன்-5, ஏ.டி.டி.5, டி9 ஆகிய உளுந்து விதைகளும், கோ.7 பாசிப்பயறு ஆகிய சான்று பெற்ற உயர் விளைச்சல் பயறு விதைகள் மொத்தம், 14 மெட்ரிக் டன் தேசிய பயறு பெருக்கத்திட்டத்தின் கீழ், கிலோவிற்கு, 25 ரூபாய் மானியத்தில் வினியோகம் செய்ய அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பில் உள்ளது.

துவரை நாற்று விட்டு நடவு செய்யும் திட்டத்தில், 140 எக்டேரில், 50 சதம் மான்யத்தில், துவரை நடவு மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும், துவரை விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தற்போது, விவசாயிகளுக்கு துவரை நடவு மேற்கொள்வதற்காக, 2.5 கிலோ துவரை விதை, பாலிதீன் பைகள், வேளாண் விரிவாக்க மையத்தில் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள், சம்பந்தப்பட்ட வேளாண் உதவி இயக்குநரை அணுகி பெற்று பயனடையலாம். இத்திட்டத்தில், துவரை நடவு செய்யும் விவசாயிகளுக்கு, ஓர் எக்டேருக்குரிய ரசாயான உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகளும் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் ஓர் ஹெக்டருக்கு, 7,500 ரூபாய் மான்ய உதவி வழங்கப்படுகிறது.

சிறுதானிய பயிரான சோளத்தில், 500 ஹெக்டேரில் செயல்விளக்கத் திடல் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஓர் ஹெக்டேர் செயல்விளக்கத் திடலுக்கு, 3,000 ரூபாய் மான்யத்தில், ரசாயான உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்பட உள்ளது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக, ஓர் ஹெக்டர் மட்டுமே வழங்கப்படும். எண்ணெய் வித்துப்பயிரான, நிலக்கடலையில் டி.எம்.வி-7, டி.எம்.வி-13, கே-6, ஜே.எல்-24 ஆகிய சான்றுபெற்ற விதைகள், 40 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது. தேசிய எண்ணெய் வித்துகள் மற்றும் எண்ணெய் பனை இயக்கத் திட்டத்தின் கீழ், டி.எம்.வி.13, கே-6 ஆகிய நிலக்கடலை ரகங்களுக்கு மட்டும் கிலோ ஒன்றுக்கு, 12 ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்க தயார் நிலையில் உள்ளது.

அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும், 650 மெட்ரிக் டன் ஜிப்சம் உள்ளது. நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 50 சதம் மான்யத்தில் எக்டருக்கு, 400 கிலோ என்ற அளவில் வழங்கப்படும். எனவே, தேவைப்படும் விவசாயிகள், சம்பந்தப்பட்ட வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி, நெல் விதைகள், பயறு விதைகள், நிலக்கடலை விதைகள், ஜிப்சம் ஆகியவைகளைப் பெற்று பயனடையலாம். நடப்பு 2014-15ம் ஆண்டில் தோட்டக்கலை துறை மூலம் மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தில், 50 சதம் மான்யத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் சார்ந்த பண்ணையம் அமைப்பதற்கு, 5,000

ரூபாய் மதிப்புள்ள பழக்கன்றுகள் அல்லது காய்கறி விதைகள் மற்றும், 20 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ரசாயான உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், 110 ஹெக்டேரில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மொத்தம், 30 அடி நீளம், எட்டு அடி அகலம், இரண்டு அடி உயரம் கொண்ட மண்புழு உரம் தயாரிக்கும் கூடம், 50 சதம் மானியத்தில் அமைக்க, 10 எண்கள் இலக்கு பெறப்பட்டுள்ளது. ஒரு மண்புழு உரக்கூடத்திற்கு மானியமாக, 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், துல்லிய பண்ணையத் திடல் அமைத்தலுக்கு, 50 ஹெக்டர் இலக்கு பெறப்பட்டுள்ளது. ஓர் ஹெக்டருக்கு, 5,000 ரூபாய் மதிப்பிலான விதைகள், 5,000 ரூபாய் மதிப்பிலான பயிர் பாதுகாப்பு மருந்துகள், 15, ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நீரில் கரையும் உரங்கள் என மொத்தம், 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக, ஓர் ஹெக்டேர் மட்டுமே வழங்கப்படும். தேவைப்படும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அணுகி பெற்று பயனடையலாம். இவ்வாறு கலெக்டர் ஜெயந்தி பேசினார். கூட்டத்தில், டி.ஆர்.ஓ., அருணா, வேளாண் இணை இயக்குநர் தெய்வேந்திரன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் சந்தானம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) ராஜேந்திரன் உட்பட விவசாயிகள் மற்றும் பல்வேறு விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

## கிரானைட்' விவாதத்தில் விவசாயிகள் ஆவேசம்;குறைதீர் கூட்டத்தில் கூச்சல், எதிர்ப்பு

மதுரை;'கிரானைட் முறைகேடுநடவடிக்கை தொடர்பாக ஆதாரமின்றி பேசக்கூடாது' என்று கூறிய விவசாயிக்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் கூச்சலிட்டனர்.

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் சுப்ரமணியன் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., சிற்றரசு பங்கேற்றார். விவாதம் வருமாறு:விவசாயி பழனிச்சாமி: மாவட்டத்தில் எல்லா குவாரிகளிலும் முறைகேடு

உள்ளது. அதை இல்லை என்று மறுத்த அதிகாரிகள் தற்போது, ஆய்வு செய்து வருகிறோம் என்கின்றனர். கீழவளவு பகுதியில் கிரானைட் கற்களை அடுக்கி வைத்து, 40 ஆயிரம் ஏக்கர் நீராதாரம் அழிக்கப்பட்டது. ஐந்தாறு ஆண்டுகளாக கண்மாய், கால்வாய்களில் தண்ணீர் போகவில்லை. அவற்றை அப்புறப்படுத்தி, தண்ணீர் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.விலைமதிப்புள்ள 3 குவாரிகளை, ஓய்வு பெற்ற தாசில்தார் ஒருவர் முறைகேடாக பயன்படுத்தியுள்ளார். அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.விவசாயி சீத்தாராமன்: இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின்பே அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஆதாரம் இல்லாமல் குற்றம் சாட்டக் கூடாது. இவ்வாறு அவர் கூறியதும், சுற்றி இருந்த விவசாயிகள் பலர் கூச்சல் போட்டு அவரது கருத்தை மறுத்தனர். அவரது இருக்கை அருகே சூழ்ந்துகொண்டு எதிர்ப்பு தெரிவித்தனர். தள்ளுமுள்ளு ஏற்படும் சூழல் ஏற்பட்டது.

கலெக்டர்: அமைதியாக உட்காருங்கள். பிரச்னைகளை முடிவுக்கு கொண்டுவரவே இக்கூட்டம்.விவசாய துணைஇயக்குனர் ஜெயசிங்ஞானதுரை, விவசாயிகளை சமாதானப்படுத்தினார். கலெக்டரும் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்தவுடன் அமைதியாயினர்.கலெக்டர்: யாரும் தனிப்பட்ட முறையில் பேசுவதற்கான கூட்டம் இதுவல்ல. கிரானைட் தொடர்பாக சட்டப்படியான வழக்கு நடந்து வருகிறது. அரசு சார்பில் அட்வகேட் ஜெனரலே ஆஜராகி வழக்கை நடத்துகிறார். பலமுறை தடை வாங்கியும், சுப்ரீம் கோர்ட் வரை சென்று நாம் ஜெயித்து உள்ளோம். மாவட்ட நிர்வாகம் அனைத்து நடவடிக்கையையும்
முழுமையாக எடுத்து வருகிறது. பிறகு ஏன் பிரச்னை செய்கிறீர்கள்? இதில் உங்களைவிட, அரசுக்கு அதிக அக்கறை உள்ளது. அரசு சொத்தை சாப்பிடுவோரை அரசு சும்மா விட்டுவிடாது. கண்மாய், கால்வாய்கள் ஆக்கிரமிப்பு நடவடிக்கை குறித்து, பொதுப்பணித்துறையினர் பதில் கூறுங்கள்.பொதுப்பணித்துறை அலுவலர் இளமுருகன்: மலம்பட்டி, கீழவளவு பகுதிகளில் கண்மாய், கால்வாய்கள் அழிப்பு தொடர்பாக 11 வழக்குகள் மேலூர் கோர்ட்டில் நடந்து வருகின்றன. அவற்றில் இறுதித் தீர்ப்பு வந்தபின்பே,

நடவடிக்கை எடுக்கமுடியும்.விவசாயி: அது எப்போது முடிந்து, எப்போது நடவடிக்கை எடுப்பது? வாய்க்காலை சுத்தம் செய்ய வழி உள்ளதா?
கலெக்டர்: வழக்கு நடக்கட்டும். இப்போது கண்மாய், கால்வாய்களை மீட்க, மேலதிகாரிகளுக்கு கருத்துருவாக்கம் அனுப்பி நடவடிக்கை எடுங்கள், என்றார்.

## வறட்சி நிவாரணம் வழங்கப்படாததால்விவசாயிகள் ஏக்கம்:நிதியின்றி முடங்கிய விவசாயப்பணிகள்

வறட்சிக்கான நிவாரணத்தொகையை அரசு நிர்ணயித்ததில் ஒரு பகுதியை மட்டும் கோவை மாவட்டத்துக்கு வழங்கிவிட்டு மீதத்தொகையை வழங்காமல் இருப்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் கடும் வறட்சி நிலவியது, தமிழகத்தில் 31 மாவட்டங்கள் வறட்சி மாவட்டமாக மாநில அரசு அறிவித்தது,மாவட்ட வாரியாக வேளாண் துறை அதிகாரிகள் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் இணைந்து, நிலப்பட்டா எண்ணைக்கொண்டு, வறண்ட பகுதிகளை நேரடியாக பார்வையிட்டனர்.வறண்ட பகுதிகளை குறியீடு செய்ததோடு, சம்பந்தப்பட்ட விவசாயிகளிடம் ஒப்புதலை பெற்று அவருக்கு சான்று அறிக்கை வழங்கினர். கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி தாலுகாவில் பொள்ளாச்சி வடக்கு மற்றும் தெற்கு, ஆனைமலை ஒன் றியத்தில் ஏராளமான கிராமங்களில் வறட்சியில் காய்ந்த விவசாய நிலங்களை கண்டறிந்தனர்.

அதில் பெரும்பாலானவை தென்னை மரங்களாகவே இருந்தன. அதனால் மரம் ஒன்றுக்கு 50 ரூபாய் இழப்பீட்டுத்தொகையாக கணக்கீடு செய்து மொத்தம் 41 கோடி இழப்பீடு ஏற்பட்டதாக அதிகாரிகள் அறிக்கை சமர்பித்தனர். அதே போல் மற்ற பயிர்களுக்கு ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு தொகையை நிர்ணயித்து மொத்தம் ஐந்தரை கோடி என்று இழப்பீட்டை குறிப்பிட்டனர்.கோவை மாவட்டத்தில் வறட்சியை மையமாக வைத்து கணக்கீடு செய்ததின் அடிப்படையில் மற்ற பயிர்களுக்கு ஐந்தரை கோடி இழப்பீடும், தென்னைக்கு 41 கோடி இழப்பீடு வழங்கலாம் என்று அப்போதைய கலெக்டர் கருணாகரன்

அரசுக்கு பரிந்துரை செய்தார்.அதற்கு பின் வந்த கலெக்டர் அர்ச்சனாபட்நாயக்கும் வழிமொழிந்து மீண்டும் ஒரு முறை அரசுக்கு நினைவூட்டினார்.அதில் ஐந்தரை கோடியை மட்டும் அரசு விவசாயிகளுக்கு வழங்கியது. தென்னை விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய 41 கோடி ரூபாயை வழங்கவில்லை.விவசாயிகள் அதிகாரிகளின் மூலம் கடிதம் எழுதி கேட்டால், அரசு இப்பிரச்னையில் அதீத கவனம் செலுத்தாமல் தட்டிக்கழித்து வருகிறது.

அதனால் மாவட்ட நிர்வாகம் இழப்பீட்டுத்தொகையை விரைவாக பெற்றுத்தர வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். கட்சிசார்பற்ற விவசாயிகள் சங்க செயலாளர் கவுண்டனுார் கந்தசாமி கூறியதாவது: தற்போது பருவமழை துவங்கியுள்ள நிலையில் இழப்பீட்டுத்தொகை கிடைத்தால் விவசாயப்பணிகள் சிறக்கும் என்றார்.- நமது நிருபர் -

## இயற்கை விவசாயமே என்றும் இனிமை

பொள்ளாச்சி :இயற்கை விவசாயத்தை மேம்படுத்தவும், பல தன்னார்வ நிறுவனங்களும், வேளாண்துறையும் களமிறங்கியுள்ளன. இதோ அந்த வகையில், விவசாயிகளுக்கும், எதிர்கால சந்ததிகளான, மாணவர்களுக்கும் இயற்கை வேளாண் முறைகளை விளக்க வாணவராயர் வேளாண் கல்லுாரி மாணவியர் சார்பில், விளக்க கூட்டம் புரவிபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடந்தது. விளைநிலத்தில் மட்டுமல்ல... வீடுகளிலும் தோட்டம் அமைக்கலாம் என்ற விழிப்புணர்வுடன் துவங்கிய கூட்டத்தில், கழிவு நீரிலும் பல வகையான காய்கறிகளை விளைவிக்கும் தொழில்நுட்பம் கற்றுத்தரப்பட்டது. ஐந்து சென்ட் நிலத்தில், 13 வகையான காய்கறி பயிர்கள் சாகுபடி செய்யலாம். முருங்கை, கருவேப்பிலை செடிகள் மற்றும் தேனி வளர்ப்பு பெட்டி அமைப்பதால், பயன் தரக்கூடும். இயற்கையான உரக்குழி அமைத்து, அதில் காய்கறி கழிவுகள் போடப்படுவதால், அவற்றை உரமாகபயன்படுத்தலாம்.

இதன் மூலம் ரசாயன உரங்களுக்கு மாற்றாக இயற்கையான உரமே பயன்படுத்தக்கூடிய சூழல் உருவாகும். தோட்டத்தின் அருகே ஒரு மீட்டர் வேலி அமைத்து, பந்தல் காய்கறி சாகுபடியும் மேற்கொள்ளலாம். வருங்கால சந்ததிகளான மாணவர்கள் விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்து தெரிந்து, அதனை காப்பாற்ற வேண்டும்,' என கல்லுாரி மாணவியர் விளக்கமளித்தனர்.

தொடர்ந்து, பள்ளியில் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்ட தோட்டத்தில், பல்வேறு வகையான காய்கறி விதைகள் நடவு செய்யப்பட்டன.

வாணவராயர் வேளாண்மை கல்லுாரி மாணவியர் கூறுகையில்,

'விவசாயம் நமது நாட்டின் அடையாளமாகவும், பெருமையாகவும் கருதப்படுகிறது. காமராஜர் பிறந்த நாள் விழாவையொட்டி, இது குறித்து மாணவர்களிடையே விளக்கும் வகையிலும், கிராம தங்கல் திட்டத்தின் கீழ் விழிப்புணர்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. மாணவர்களுக்கும், விவசாயிகளுக்கும், இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளோம்,' என்றனர்.

## விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்

விழுப்புரம்: விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில், மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். வேளாண்மை இணை இயக்குநர்(பொறுப்பு) ராஜாமணி, மண்டல கால்நடைத்துறை இணை இயக்குனர் ராமசாமி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஆறுமுகம் வேளாண் அலுவலர் கதிரேசன், முன்னாள் எம்.பி., தன்ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கலெக்டர் சம்பத் பேசியதாவது:

மாவட்டத்தில் ராஜஸ்ரீ சுகர்ஸ், தரணி சுகர்ஸ், மெட்ராஸ் சுகர்ஸ் மற்றும் இ.ஐ.டி., பாரி(அரியூர்) சர்க்கரை ஆலைகள் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,550 என்ற அடிப்படையில், விவசாயிகளின் நிலுவைத் தொகை வழங்கப்படாதது குறித்து

புகார் எழுந்துள்ளது. தொடர் நடவடிக்கை எடுப்பதற்கான காரணம் கேட்கும் அறிவிப்பு (ஷோகாஸ் நோட்டீஸ்) அனுப்பிட, கடந்த 11ம் தேதி பதவி வழி கரும்பு ஆய்வாளர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகள் நிலுவைத் தொகையை ஒரு வார காலத்திற்குள் விவசாயிகளுக்கு செலுத்த வேண்டும். நிலுவை வைத்துள்ள சர்க்கரை ஆலைகள், கரும்பு அரவை பருவத்தை துவக்கக் கூடாது. கரும்பு விவசாயிகளின் நிலு<வைத் தொகையை தனியார் சர்க்கரை ஆலைகள் உடனடியாக செலுத்தத் தவறினால், "ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்' மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டால், சர்க்கரை ஆலைகள் மூடப்படும் நிலை உருவாகும். இவ்வாறு கலெக்டர் சம்பத் தெரிவித்தார்

## **நொய்யல் நீர் பங்கீட்டில் புறக்கணிக்கப்படும் திருப்பூர்**

திருப்பூர்:நொய்யல் ஆற்றில் வரும் நீர் முழுவதையும், கோவை மாவட்டத்தில் உள்ள குளங்களுக்கு பங்கீடு செய்து வழங்கப்படுவதால், ஆண்டிபாளையம் உள்ளிட்ட திருப்பூர் மாவட்ட குளங்களுக்கு வருவதில்லை.மேற்குத்தொடர்ச்சி மலையில் உருவாகும் நொய்யல் ஆறு, கோவை, திருப்பூர் மாவட்டங்கள் வழியாக சென்று, காவிரியில் கலக்கிறது. ஆற்றின் குறுக்கே உள்ள, 23 தடுப்பணைகள் மூலம் 31 குளங்கள் பயன்பெறுகின்றன.

நொய்யல் ஆற்றின் மூலம், கோவை மாவட்டத்தில், இருகூர் குளம், ஆச்சான்குளம், கண்ணம்பாளையம், பள்ளபாளையம், அருகம்பாளையம், சூலூர், செம்மாண்டம்பாளையம், சாமளாபுரம் குளங்களுக்கு தண்ணீர் பிரித்து வழங்கும் நடைமுறை அமல்படுத்தப்படுகிறது.குளங்களின் பரப்பளவுக்கு ஏற்ப, நீர் திருப்பி விடப்படும் நாட்கள் முன்னதாக அறிவிக்கப்படுகிறது; அதன் அடிப்படையில், மடைகள் அடைக்கப்பட்டு நீர் பங்கீடு செய்யப்படுகிறது. குளங்களுக்கு மட்டுமன்றி, ஆற்றிலும் ஒரு மாதம் தண்ணீர் வழங்கப்படுகிறது. இதன் மூலம், ஆற்றின் குறுக்கே உள்ள ராசிபாளையம் மற்றும் மாதப்பூர் அணைக்கட்டுகள்

நிரம்பி பயன்பெறுகின்றன. இவ்வாறு, நொய்யல் ஆற்றில் வரும் நீர் முழுவதும் கோவை மாவட்டத்துக்குள் பங்கிடப்படுகிறது. ஆனால், சாமளாபுரம் குளத்தில் இருந்து நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆண்டிபாளையம் குளத்துக்கு நீர் வழங்கப்படுவதில்லை.

மேற்குத்தொடர்ச்சி மலை நீர்ப்பிடிப்பு பகுதிகளில், தற்போது, தென்மேற்கு பருவமழை பெய்து வரும் நிலையில், நொய்யல் ஆற்றில், சித்திரைச்சாவடி வரை தண்ணீர் வந்துள்ளது. 20 கி.மீ., வரை ஆற்றில் நீர் போக்கு உள்ளதால், 65வது கிலோ மீட்டரில் <உள்ள ஆண்டிபாளையம் குளத்துக்கு, இந்த நீரை கொண்டு வர முடியும் என விவசாயிகள் கருதுகின்றனர்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் ஈஸ்வரன் கூறுகையில், ""கோவை மாவட்ட குளங்கள் மற்றும் வழியோர பகுதிகள் பயன்பெறும் வகையில், நீரை பங்கீடு செய்து கொள்கின்றனர். ஒவ்வொரு குளமும் பல நூறு ஏக்கர் பரப்பளவுள்ளவை. நொய்யல் மூலம் பயன் பெற்று வந்த, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள குளத்துக்கு தண்ணீர் வழங்கப்படுவதில்லை.

""இதன் காரணமாகவே ஆண்டிபாளையம் உள்ளிட்ட குளங்கள் பல ஆண்டுகளாக வறண்டு காணப்படுகின்றன. திருப்பூர் மாவட்ட நிர்வாகம், நொய்யல் ஆற்று நீரில், உரிய பங்கீடு பெற வேண்டும்," என்றார்.பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் குமாரசாமியிடம் கேட்ட போது,""குளங்களுக்கு நீர் பங்கீடு பட்டியலில் ஆண்டிபாளையம் குளமும் உள்ளது.""65வது கிலோ மீட்டரில் உள்ளதால், தண்ணீர் வழங்கினாலும், வந்து சேருவது தாமதமாகும். ஒரு மாதம் ஆற்றில் நீர் திருப்பி விடப்படும்போது, ஆண்டிபாளையம் குளத்துக்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

## கொப்பரை தேங்காய் ரூ.15 லட்சத்துக்கு ஏலம்

கோபிசெட்டிபாளையம்: கோபி, ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த ஏலத்தில், 436 தேங்காய் பருப்பு மூட்டைகள், 15 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், வியாழக்கிழமை தோறும், கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கும். அதன்படி, ஈரோடு மாவட்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், கொப்பரை தேங்காயை ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர். மொத்தம், 97 விவசாயிகள் ஏலத்தில் பங்கேற்றனர். ஒரு கிலோ கொப்பரை தேங்காய் பருப்பு, 96.89 முதல் 102.09 ரூபாய்க்கு விலை போனது. மொத்தம், 436 மூட்டைகள், 15 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது, என, கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகேந்திரசிங் தெரிவித்தார்.

## காய்கறி திட்டத்துக்கு புத்துயிர் கொடுக்க முயற்சி

ஊட்டி:நீலகிரியில், தொய்வடைந்த, மாநில முதல்வரின் பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்திற்கு புத்துயிர் கொடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.மாநிலத்தில், சென்னை, கோவை நகரங்களில், புற மாநகர் காய்கறி சாகுபடியாளர்கள் அபிவிருத்தி திட்டத்தை, மாநில அரசு, கடந்தாண்டு அறிமுகப்படுத்தியது. அதன்படி, சென்னை, கோவை மக்களுக்கு, சுற்றியுள்ள பிற மாவட்டங்களில் விளையும் காய்கறிகளை, தரமான முறையில், நியாயமான விலையில் வழங்க திட்டமிடப்பட்டது.

அதன்படி, கோவை மாநகர மக்களுக்கு, அங்கு விளையும் காய்கறிகள் தவிர, நீலகிரி, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் விளையும், காய்கறிகளை அனுப்பி வைக்கும் வகையில், நீலகிரி மாவட்டத்தில், விவசாயிகளை உள்ளடக்கி, "விவசாய குழுக்கள்' ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்கு மானிய விலையில், வாகன, சேமிப்பு கிடங்கு வசதி செய்து கொடுக்கப்பட்டது. தொடர்ச்சியாக, கடந்தாண்டு செப்., 1ம் தேதி, ஊட்டி அருகேயுள்ள அணிக்கொரை, கீழ் கவட்டி கிராமங்களில், காய்கறி சேகரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டன.கோவையில் உள்ள வியாபாரிகள், அந்த கொள்முதல் மையத்திற்கே வந்து, விவசாயிகளிடம் இருந்து நேரடியாக

காய்கறிகளை கொள்முதல் செய்து கொள்ளும் வகையில், திட்டம் வகுக்கப்பட்டது; ஆனால், இத்திட்டம் எதிர்பார்த்த பலனை கொடுக்கவில்லை. தினமும் 2, 3 டன் காய்கறிகள் மட்டுமே, கோவைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.எனவே, இத்திட்டத்திற்கு புத்துயிர் கொடுக்கும் வகையில், ஊட்டி நகரின் மையப் பகுதியில், "பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்தின் கீழ் காய்கறி சேகரிப்பு மையம் திறக்கப்பட்டது.

திட்டத்தின் கீழ், விவசாயிகளிடம் இருந்து காய்கறிகளை வாங்கி வந்த வியாபாரிகள், பாதியில் "கல்தா' கொடுப்பதை தவிர்க்க, தோட்டக்கலை துறையுடன், புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் சந்தை ஒருங்கிணைப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.அதன்படி, இந்த புதிய சேகரிப்பு மையத்தை, நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர், நேற்று துவக்கி வைத்தார். விவசாயிகளிடம் இருந்து உருளைக் கிழங்க, பீட்ரூட், பீன்ஸ், முட்டை கோஸ் என, 2,500 கிலோ எடையிலான பலவகை காய்கறிகள் சேகரிக்கப்பட்டு, விற்கப்பட்டன. அதற்குரிய சந்தை விலையாக ஒரு லட்சம் ரூபாயை, சந்தை ஒருங்கிணைப்பாளர், கலெக்டர் முன்னிலையில், விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்தார்.நிகழ்ச்சியில், தோட்டக்கலை துறை இணை இயக்குனர் (கூடுதல் பொறுப்பு) மணி, உதவி தோட்டக்கலை அலுவலர் மீராபாய் உட்பட பலர் பங்கேற்றனர்.

## குன்னூரில் அனுமதியின்றிவெட்டப்பட்டு வரும் மரங்கள்

குன்னூர்:குன்னூர் அருகே, விதிமுறைகளை மீறி பல்வேறு வகை மரங்கள் வெட்டி கடத்தப்பட்டு வருவது அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது.நீலகிரி மாவட்டம் குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பழமை வாய்ந்த அரிய வகை மரங்கள் ஏராளமாக உள்ளன. இவற்றில், வனப்பகுதியையொட்டிய, வருவாய் துறைக்கு சொந்தமான இடங்கள், தனியார் இடங்களில், அடிக்கடி அனுமதியின்றியும்,விதிகளை மீறியும் ஏராளமான மரங்கள் வெட்டி கடத்தப்படுகின்றன.இந்நிலையில், குன்னூர் நகராட்சி 3வது வார்டு கீழ் அட்டடி

பகுதியில் தனியாருக்கு சொந்தமான இடத்தில், யூகலிப்டஸ், சாம்பிராணி உட்பட அரிய வகையிலான மரங்கள், விதிகளை மீறி வெட்டப்பட்டு வருகின்றன.

"இதன் அருகே உள்ள அடர்ந்த காடுகளிலும், மரங்கள் வெட்டப்பட்டு வருவது' என, உள்ளூர் மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.இதேபோல, குன்னூர் கன்டோன்மென்ட் ஒன்றாவது வார்டு பகுதியில் உள்ள வருவாய் துறைக்குட்பட்ட ஆறு அருகே உள்ள பழமை வாய்ந்த மிக உயர்ந்த மரங்கள் பாதியளவில் அறுக்கப்பட்டு கடத்தப்படுகிறது.

இது தொடர்பாக, வருவாய் துறையிடம் எந்த அனுமதியும் வாங்கவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.குன்னூர் ரேஞ்சர் சிவாவிடம் கேட்டபோது, ""தனியார் பகுதிகளில் உள்ள மரங்களை வெட்ட மாவட்ட கலெக்டர் தலைமையிலான குழு அனுமதி வழங்குகிறது. கீழ் அட்டடி பகுதியில் வெட்டப்படும் மரங்களுக்கு அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை. அப்பகுதியை ஆய்வு செய்து, சம்மந்தப்பட்ட வர்கள் மீது சட்டபடியான நடவடிக்கை எடுக்கப்படும்,"என்றார்.

### செட்டிகுளம் வணிக வளாகத்தில் வெங்காய ஏலம் துவக்கம்

பெரம்பலூர்: செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில், தொடங்கப்பட்ட ஏலத்தில், 33 மூட்டை சின்ன வெங்காயம், 26 ஆயிரத்து, 43 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.
பெரம்பலூர் மாவட்டத்தில், சின்ன வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகள், தங்களது பகுதியிலேயே ஏல முறையில் உரிய விலைக்கு விற்பனை செய்யும் வகையில், செட்டிக்குளத்தில் 1.14 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட வெங்காய வணிக வளாகத்தை, கடந்த மாதம் 27ம் தேதி, வீடியோ கான்ஃபரன்ஸ் மூலம் தமிழக முதல்வர் திறந்து வைத்தார். இந்த வளாகத்தில் முதன்முறையாக, விவசாயிகளின் வெங்காயம் ஏல முறையில் விற்பனை நேற்று முன்தினம் தொடங்கப்பட்டது. இதில் ஏழு வியாபாரிகள், விவசாயிகளிடமிருந்து கிலோ 15

ரூபாய் முதல், 18 ரூபாய் வரை ஏலம் எடுத்தனர். அதன்படி ஆறு விவசாயிகளின், 33 மூட்டை (1,620 கிலோ) வெங்காயம் 26 ஆயிரத்து 43 ரூபாய்க்கு விற்பனையானது. செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில், வாரம்தோறும் வியாழக் கிழமைகளில் வெங்காய ஏல விற்பனை நடைபெற உள்ளதாகவும், இதில் பங்கேற்க விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு எவ்வித கட்டணமும் கிடையாது. எனவே பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் விற்பனை மையத்தில், தங்களது வெங்காயத்தை விற்பனை செய்து பயன்பெறலாம் என வேளாண் துறையினர் அறிவித்துள்ளனர்.

## நாட்டுக் கோழி வளர்ப்பு பயிற்சி

திருச்செங்கோடு: திருச்செங்கோடு வட்டாரத்தில், வேளாண் தொழில் நுட்ப மேலாண் முகமை திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு, நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பண்ணை வயல்வெளி பள்ளி பயிற்சி, ஆனங்கூரில் நடந்தது. திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குனர் நமச்சிவாயம் தலைமை வகித்தார். ஆனங்கூர் கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் கவுதம், விவசாயிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு முறை குறித்து, ஆறு கட்ட செய்முறை விளக்கம் அளித்தார். துணை வேளாண் அலுவலர் சங்கரன், வட்டார தொழில் நுட்ப மேலாளர் பன்னீர்செல்வம், தொழில் நுட்ப வல்லுனர் ராஜா, விவசாயத் துறை அதிகாரிகள், முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர். முடிவில், 25 விவசாயிகளுக்கு, நாட்டுக் கோழிக்குஞ்சுகள், இலவசமாக வழங்கப்பட்டது.

## தேயிலை குடோனுக்கு வருமான வரித்துறை 'சீல்'

உடுமலை,:உடுமலையில், முறையான அனுமதி மற்றும் வரி செலுத்தாமல், இயங்கி வந்த தரம் குறைந்த தேயிலைத்துாள் குடோனுக்கு வருமான வரித்துறையினர் சீல் வைத்தனர். திருப்பூர் மாவட்டம் உடுமலை பழனியாண்டவர் மில் அருகிலுள்ள தனியார் குடோனில், தரம் குறைந்த தேயிலைத்துாள் பதுக்கப்பட்டு, கேரள

மாநிலத்திற்கு விற்பனைக்கு அனுப்பப்படுவதாக திட்டமிட்ட குற்ற நுண்ணறிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

நேற்றுமுன்தினம் மாலை அப்பிரிவு போலீசார் குடோனில் ஆய்வு செய்த போது, 700 டன் தரம் குறைந்த தேயிலைத்துாள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. அதை இருப்பு வைக்க, அரசு அனுமதி மற்றும் வரி செலுத்தப்படவில்லை என விசாரணையில் தெரியவந்தது.
தகவல் அறிந்த வருமான வரித்துறை அதிகாரிகள் குடோன் கண்காணிப்பாளர் மணியனிடம் விசாரணை நடத்தினர். அதில், குடோனை வாடகைக்கு எடுத்து பயன்படுத்தி வரும் கேரள மாநிலம் மறையூரை சேர்ந்த அஸ்வின் ஜோஸ், 45, பிரபல தனியார் நிறுவனத்திற்காக தேயிலைத்துாளை இருப்பு வைத்திருப்பது தெரியவந்தது.அசாம் மாநிலத்தில், தேயிலைத்துாள் உற்பத்தி நிறுவனங்களில் 2 சதவீத கழிவு வெளியாகும்.

தேயிலை கொழுந்துடன், கழிவுத்தேயிலையும் கலந்து 'ப்ளேவர்' எனப்படும் சுவைகள் சேர்க்கப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.உடுமலையில் தனியார் மில் நிர்வாகத்தின் குடோனை வாடகைக்குப்பெற்று, கழிவுத்துாளை மூட்டைகளை இருப்பு வைத்துள்ளனர். ஆனால், உரிய அனுமதி பெறவில்லை. விற்பனை வரி செலுத்தாமல், கேரள மாநிலத்திற்கு அதை விற்பனைக்கு எடுத்துச்சென்றுள்ளனர்.வருமான வரித்துறை அதிகாரிகள், சம்பந்தப்பட்ட நிறுவனம் பல லட்ச ரூபாய் வரை வரி ஏய்ப்பு செய்துள்ளதை கண்டறிந்தனர். இதனையடுத்து, குடோனுக்கு சீல் வைத்துள்ளனர்.

## முதல்வர் திறந்து வைத்த மீன்பிடி இறங்கு தளம் : பயன்பாட்டிற்கு வராத அவலம்

பரங்கிப்பேட்டை: பரங்கிப்பேட்டை அன்னங்கோவிலில் 13 கோடி ரூபாய் மதிப்பில் புதியதாக கட்டப்பட்ட மீன்பிடி இறங்கு தளத்தை முதல்வர் வீடியோ கான்பரன்ஸ் மூலம் திறந்து வைத்தும் இன்னும் பயன்பாட்டிற்கு கொண்டுவர

அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், 20க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

பரங்கிப்பேட்டை கடற்கரை கிராமங்களான சாமியார்பேட்டை, புதுக்குப்பம், புதுப்பேட்டை, பரங்கிப்பேட்டை, சின்னூர் உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் பரங்கிப்பேட்டை அன்னங்கோவில் முகத்துவாரம் வழியாக படகில் கடலுக்கு சென்று பிடித்து வருகின்றனர். தினமும் 50 டன் அளவிற்கு கேரளா, ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு கனரக வாகனங்கள் மூலம் அனுப்பப்படுகிறது. கடலில் இருந்து படகுகள் மூலம் கொண்டு வரப்படும் மீன் வகைகள் அன்னங்கோவில் மண் தரையில் வைத்து சுகாதாரமற்ற நிலையில் பேக்கிங் செய்யப்படுவதால், மீன்பிடி இறங்குதளம் கட்டித்தரக்கோரி கடந்த 20 ஆண்டுகளாக மீனவர்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து, கடந்த 2011ம் ஆண்டு டிசம்பர் மாதம் அன்னங்கோவிலில் 13 கோடி ரூபாய் மதிப்பில், மீன்களை ஏலம் விட 3 கட்டடங்கள், வலைகளை காய வைக்க, பின்னுவதற்கு 2 கட்டடங்கள், மீன்களை விற்பனை செய்ய 3 கட்டடங்களில் 120 அறைகள், பெண்கள், ஆண்களுக்கு தனித்தனியாக கழிவறை, குடிநீர், வாகனங்கள் பார்க்கிங் வசதி, நிர்வாக அலுவலகம், மீன் பதப்படுத்தும் ஐஸ் பிளாண்ட் சாலை வசதி, மின் இணைப்பு உள்ளிட்ட அனைத்து கட்டட பணிகளும் முடிந்து கடந்த ஒரு ஆண்டாக திறக்கப்படாமல் இருந்தது. இந்நிலையில், கடந்த மாதம் முதல்வர் ஜெயலலிதா வீடியோ கான்பரன்ஸ் மூலம் அன்னங்கோவில் மீன் இறங்குதளத்தை திறந்து வைத்தார். ஆனால் கடந்த ஒரு மாதமாக மீன் இறங்குதளத்தை பயன்பாட்டிற்கு கொண்டுவர மீன்வளத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் புதியதாக கட்டப்பட்ட கட்டடங்கள் பூட்டியே கிடக்கிறது. இதனால், மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதுகுறித்து மீன் வியாபாரி செழியன் கூறுகையில், "மீன்பிடி இறங்கு தளத்தில், இன்னும் மின்சார வசதி, குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. தற்போது இரவு நேரங்களில் சமூக விரோதிகள் குடித்துவிட்டு பாட்டில்களை நடந்துச் செல்லும் பாதைகளில் உடைத்துப் போடுகின்றனர். மீனவர்களின் நலன் கருதி

விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவர மீன் வளத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

### மானியத்தில் பயிர் சாகுபடி கலெக்டர் நேரில் ஆய்வு

தஞ்சாவூர்: தோட்டக்கலை துறை மானியத்தில் சாகுபடி செய்யப்படும் பயிர்களை கலெக்டர் ஆய்வு செய்தார். தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம், புதுப்பட்டிணம் ஆகிய கிராமங்களில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறை சார்பில், சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களை கலெக்டர் சுப்பையன் ஆய்வு செய்தார்.

இதில், குருங்குளம் கிழக்கு கிராமத்தில் உத்தராபதி என்பரவது தோட்டத்தில், 30 ஆயிரம் ரூபாய் மான்யத்தில், மண்புழு உரம் தயாரிப்பு, 7,500 ரூபாய் மான்யத்தில் தேனீக்கள் வளர்ப்பு, 49, 597 ரூபாய் மான்யத்தில் நெல்லிகாய் பயிர், மற்றும், ஒரு லட்சத்து ஒன்பதாயிரம் ரூபாய், மானியத்தில் கரும்பு பயிர் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டு உள்ளதை ஆய்வு செய்தார். தொடர்ந்து, புதுப்பட்டிணம் கிராமத்தில், ரெங்கராஜ் என்பவர் வயலில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 50 சதவிகித மானியத்தில் கொய்யா கன்றுகள் நடவு மற்றும் அங்கு, ஊடு பயிராக சாகுபடி செய்யப்பட்டுள்ள கோழி கொண்டை மற்றும் காக்கரட்டான் மலர் சாகுபடியை பார்வையிட்டார். ஆய்வின் போது, வேளாண்மை துணை இயக்குநர் ராம்தாஸ், கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சொக்கலிங்கம், தோட்டக்கலை துணை இயக்குநர் தமிழ்களஞ்சியம் உட்பட பலர் உடனிருந்தனர்.

### சோலார் மின்திட்டத்தால் பாதிப்பு;நெல்லையில் விவசாயிகள் எதிர்ப்பு

திருநெல்வேலி;நெல்லை மாவட்ட மாதாந்திர விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது.கலெக்டர் கருணாகரன் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் உமா மகேஸ்வரி முன்னிலை வகித்தார். நெல்லை மாவட்டத்தில் பாபநாசம் அணை மூலம் கார் பருவ நெல் சாகுபடிக்கு வெறும் 18

ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தண்ணீர் வழங்கப்படாத கோடகன் கால்வாய், திருநெல்வேலி கால்வாய், பாளையங்கால்வாய் உள்ளிட்ட சுமார் 25 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் வழங்கவேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கவும் கோரிக்கை விடுத்தனர்.

சங்கரன்கோவில் வட்டாரம் நடுவகுறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் சிப்காட் நிறுவனமும் தனியார் சோலார் பவர் நிறுவனமும் இணைந்து விவசாயிகளிடம் முன்அனுமதி பெறாமல் திட்டத்தை செயல்படுத்த கணக்கெடுப்பு நடத்திவருகின்றனர். எனவே அந்த திட்டத்தில் விருப்பம் இல்லாத விவசாயிகளை கட்டாயப்படுத்தக் கூடாது எனவும் சோலார் திட்டத்தை கட்டாயப்படுத்தினால் விவசாயிகளின் வாழ்வாதாரம், உணவு உற்பத்தி பாதிக்கப்படும் எனவும் வறட்சி பகுதிகளில் சோலார் மின்திட்டத்தை செயல்படுத்துமாறும் கேட்டுக்கொண்டனர். இதற்கான மனுவை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் விவசாயிகள் ஊர்வலமாக வந்து கொடுத்தனர்.

## இலவச மண் பரிசோதனை முகாம்

ரெட்டியார்சத்திரம்:திருச்சி தோட்டக்கலை கல்லூரி மாணவியர் சார்பில், விவசாயிகளுக்கான இலவச மண்பரிசோதனை முகாம் டி.புதுப்பட்டியில் நடந்தது. ஊராட்சி துணைத்தலைவர் மகுடீஸ்வரன் தலை மை வகித்தார். வட்டார வளங்குன்றா வேளாண் மை நிறுவன தலைவர் ராஜசேகரன், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய அறிவியலாளர் தேவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மண்பரிசோதனையின் அவசியம், மண் சேகரிப்பு முறை, மண்ணின் தன்மையை அறியும் முறை குறித்து, தோட்டக்கலை கல்லூரி உதவிப்பேராசிரியர் ஜெயக்குமார் விளக்கினார். பயிர், நீர் மேலாண்மை குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது. தோட்டக்கலை துணை அலுவலர் சென்றாயன், அரசுத்திட்டங்கள், சலுகைகள் குறித்துப்பேசினார். தோட்டக்கலை மாணவியர்

சுகன்யா, கவுரிமனோகரி, சிவசுந்தரி, தாஹிராயாஸ்மீன், ஸ்ரீயமுனா, வித்யா ஆகியோர் பரிசோதனைக்கான மண் சேகரிப்பு முறை குறித்து செயல்விளக்கம் அளித்தனர். சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகள், திண்டுக்கல் ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. டி.புதுப்பட்டி, தெத்துப்பட்டி, காமாட்சிபுரம், சுற்றுப்புற கிராமங்களைச்சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

**ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்குகோபி சேனைக்கிழங்கு வரத்து**

ஒட்டன்சத்திரம்:கோபியில் விளைந்த சேனைக்கிழங்கு, ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் கிலோ ரூ.26 க்கு விற்பனை செய்யப்படுகிறது.ஒட்டன்சத்திரம் பகுதியில் தக்காளி, முருங்கை உள்ளிட்ட காய்கள் அதிகமாக பயிரிப்படுவது வழக்கம். கேரட், உருளைகிழங்கு, சேனை கிழங்கு போன்றவை வெளியிடங்களில் இருந்து விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.கோபிசெட்டிபாளையத்தில் அறுவடை செய்யப்பட்ட சேனைக்கிழங்கு, ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு லாரிகளில் கொண்டு வரப்படுகிறது. வாரத்திற்கு ஒரு முறை 3 டன்னுக்கும் அதிகமாக சேனைக்கிழங்கு இங்கு விற்பனையாகிறது. இவற்றை கேரள வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். நேற்று ஒரு கிலோ சேனைக்கிழங்கு ரூ.26 க்கு விற்பனையானது. கடந்த வாரம் கிலோ ரூ.25 க்கு விற்றது.கமிஷன்கடை <உரிமையாளர் ஒருவர் கூறுகையில்,"" கேரள வியாபாரிகளுக்கு தேவைப்படும் காய்கள் இங்கு கிடைக்கவில்லை எனில், வெளியிடங்களில் இருந்து வாங்கி வந்து கொடுக்கிறோம்," என்றார்.

**கோழிப்பண்ணைக்கு மானியம்பயனாளிகள் தேர்வு துவக்கம்**

திண்டுக்கல்:மாவட்டத்தில் நாட்டு கோழி பண்ணை அமைப்பதற்காக மானியத்துடன் கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. ஒரு பண்ணையில் 250 கோழிகள் வளர்க்க வேண்டும். ஒரு கோழிக்கு ஒரு சதுர அடி வீதம் மொத்தம் 250 சதுர அடி நிலம், பண்ணை அமைப்பவருக்கு சொந்தமாக இருக்க வேண்டும். இதற்கான மதிப்பீடு ரூ. ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 500 என

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த பணத்தை வங்கியிலிருந்து கடனாக பெறலாம். இதில் 25 சதவீதம் தமிழக அரசு மானியமாக வழங்கும். நபார்டு வங்கியிலிருந்து 25 சதவீதம் மானியம் அளிக்கப்படும்.சுயமாக முதலீடு செய்பவர்களுக்கு மாநில அரசின் 25 சதவீத மானியம் மட்டும் வழங்கப்படும். கடந்த ஆண்டு திண்டுக்கல் மாவட்டத்தில் 240 பேருக்கு பண்ணை அமைப்பதற்கான மானியம் வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 160 பேருக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பயன்பெற விரும்புபவர்களின் நிலங்கள் அவர்கள் பெயரிலோ அல்லது உறவினர் பெயரிலோ இருக்க வேண்டும். கால்நடைத்துறை உதவி மருத்துவர்களிடம் இதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம். கோழி பண்ணைகளை அதிகரிப்பதன்மூலம் மாவட்டத்தில் இறைச்சி தேவையை பூர்த்தி செய்வது, விலையை குறைப்பது, பதப்படுத்தப்பட்ட இறைச்சி டின் ஏற்றுமதி செய்யும் தொழிலை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 100 திராட்சை ரகங்கள் சோதனை முறையில்..சாகுபடி: ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் தீவிரம்

கம்பம்:திராட்சை ஆராய்ச்சி நிலைய சோதனை திடலில் 100 ரகங்கள் சோதனை முறையில் சாகுபடி செய்ய ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளனர். இந்தியாவில் திராட்சை சாகுபடியில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடம் பெறுகிறது. புனேயில் தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு நவீன ரகங்கள், சாகுபடிமுறைகள் சொல்லித்தரப்படுகின்றன. முன்கூட்டியே சீதோஷ்ணநிலை மாற்றங்களும் அறிவிக்கப்படுகின்றன.

தமிழகத்தில் திராட்சை சாகுபடியில் கம்பம் பள்ளத்தாக்கு முதலிடம் பெறுகிறது. ஆண்டுதோறும் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. அதாவது ஆண்டிற்கு மூன்று

முறை அறுவடை செய்கின்றனர். ஆனால் புதிய ரகங்கள், நவீன தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு கிடைப்பதில் தடங்கல் உள்ளது. சமீபத்தில் விவசாயிகள் பெங்களூரு, புனே போன்ற நகரங்களுக்கு சென்று நவீன ரகங்களை வாங்கி வந்து சாகுபடி செய்து வருகின்றனர்.

அதாவது ஏற்றுமதி ரகம், ஒயின் ரகம் சாகுபடி செய்யப்படுகிறது. இருந்த போதும் அந்த ரகங்களுக்கான தொழில்நுட்பம் பின்பற்றுவதில் விவசாயிகள் திணறி வருகின்றனர்.

இந்நிலையில் விவசாயிகளுக்கு புதிய ரகங்கள், நோய் மேலாண்மை, நவீன தொழில்நுட்பம், மார்க்கெட்டிங் போன்றவற்றிற்காக காமயகவுண்டன்பட்டி அருகில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு அனுமதி வழங்கியது.

அதன்பேரில் சண்முகாநதி அணை அருகில் 28 ஏக்கரில் திராட்சை ஆராய்ச்சி நிலைய பணிகள் துவங்கியது. இதற்கென முதற்கட்டமாக ரூ. 56 லட்சம் ஒதுக்கப்பட்டது. இரண்டு இடங்களில் போர் போட்டு, மோட்டார்கள் பொருத்தி தயார் செய்துள்ளனர்.

5 ஏக்கரில் சோதனை திடல் அமைக்கப்பட்டுள்ளது. இதில் புனே தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து 100 ரகங்கள் வாங்கி வந்து சாகுபடி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் பார்த்திபன் கூறுகையில், " சாப்பிடும் பழம், ஜூஸ் ரகம், ஏற்றுமதி ரகம், ஒயின் ரகம் உள்ளிட்ட பல வகையான 100 ரகங்கள் மாதிரி திடலில் சாகுபடி செய்யப்படும். விவசாயிகளை அழைத்து வந்து அவர்களுக்கு தேவையான ரகம் வழங்கப்படும்.

இந்த பணிகளை துவக்க மின்சாரம் அவசியம். மின் இணைப்பிற்கு விண்ணப்பித்துள்ளோம். என்ன காரணத்தாலோ மின் இணைப்பு தருவதற்கு காலதாமதம் ஆகி வருகிறது. மின்இணைப்பு கிடைத்தவுடன், சோதனை திடல் அமைக்கும் பணிகள் துவங்கும்' என்றார்.

## தென்னையை காப்பாற்றவிவசாயிகளுக்கு பயிற்சி

பெரியகுளம்: தென்னையை காப்பாற்ற விவசாயிகள் மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். பெரியகுளம் விவசாயத்துறை சார்பில், கைலாசபட்டி பகுதியில் விவசாயிகளுக்கு தென்னை மரங்கள் பாதுகாப்பு மற்றும் மரங்களை தாக்கும் காண்டாமிருகவண்டு மற்றும் சிகப்பு கூண்வண்டு தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்தும், இனக்கவர்ச்சி பொறி பயன்படுத்தி கட்டுப்படுத்தும் செயல்முறை விளக்கம் செய்து காட்டப்பட்டது. இந்த முறை சுற்றுச்சூழலை பாதிக்காத வகையிலும், மாசுபடுத்தாத வகையிலும் உள்ளது. மெக்கானிக்கல் முறை மூலம் பயன்படுத்துவதால் பூச்சிமருந்து பயன்படுத்தும் செலவினைக் காட்டிலும் மிக குறைந்த செலவாகும், என கூறப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் பெரியகருப்பன், உதவி அலுவலர் ராமன் மற்றும் அட்மா தொழில்நுட்ப வல்லுநர் மணிகண்டன் ஆகியோர் விவசாயிகளுக்கு செய்து காட்டினர். இதில், குள்ளப்புரம் வேளாண்மை தொழில்நுட்பக் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவிகள் தீபிகா, தேவி, சந்திரவதனா உட்பட எட்டு மாணவிகள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பங்கேற்றனர்.

## நகைகளை திருப்ப கூறி வங்கிகள் நிர்ப்பந்தம்: தற்கொலைதான் வழி என விவசாயி ஆதங்கம்

விருதுநகர்: பயிர் கடன் பெறுவதற்காக வங்கிகளில் விவசாயிகள் நகைகளை அடமானம் வைத்துள்ள நிலையில்,இதை உடனடியாக திருப்ப வலியுறுத்தி வங்கிகள் "நோட்டீஸ்' அனுப்புகின்றனர். வங்கி நிர்வாகம் நிர்பந்தம் செய்தால் தற்கொலை செய்வதை தவி வேறு வழியில்லை என,விவசாயி தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

விருதுநகர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், கலெக்டர் ஹரிஹரன் தலைமையில் நேற்று நடந்தது. அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

விவசாயிகள் விவாதம்:விஜயமுருகன்(விருதுநகர்): கூட்டுறவு வங்கி மற்றும் அரசு வங்கிகளில் பயிர் கடன் பெற, விவசாயிகள் நகைகளை அடமானம் வைத்துள்ளனர். கடந்த இரு ஆண்டுகளாக மழை இல்லாததால் விவசாயம் பொய்த்து விட்டது. நகை மதிப்பும் குறைந்து விட்டது.

இதனால் வங்கி நிர்வாகம் விவசாயிகளுக்கு "நோட்டீஸ்' அனுப்புகின்றன. நகை திருப்புவதை ஒரு ஆண்டு என்பதை மூன்றாண்டுக்கு ஒரு முறையாக மாற்ற வேண்டும், இல்லையென்றால் விவசாயிகள் தற்கொலை செய்வதை தவிர்த்து வேறு வழியில்லை .

இருளப்பன்(கூமாபட்டி): பெரியாறு, கோவிலாறு வரத்து கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்பு மற்றும் முள் செடிகளை அகற்றி தூர்வார வேண்டும்.

அதிகாரி: ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை தான் தூர்வார அரசு அனுமதி உள்ளது .

இருளப்பன்(கூமாபட்டி ):சிறப்பு நிதி பெற்றாவது கால்வாயை தூர்வார வேண்டும்.

மாரியப்பன்(விஜயகரிசல்குளம்): வனத்துறை சார்பில் பொது இடம் மற்றும் பட்டா நிலங்களில் மரக்கன்று நடப்பட்டுள்ளது. தண்ணீர் ஊற்றாததால், மரக்கன்றுகள் கருகி வருகின்றன. இதற்கு நிதி ஒதுக்கி மரக்கன்றுகளை பாதுகாக்க வேண்டும் .மார்க்கண்டேயன் (சித்தலைக்குண்டு): சொட்டு நீர் பாசன கருவி வழங்க தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் போடப் பட்டது. இதற்கு தோட்டக்கலை மூலம் முழு மானியம் வழங்குகின்றனர். அந்த நிறுவனத்தினர், விவசாயிகளிடம் ரூ. 7000 பெற்றுகொண்ட குழியும் தோண்ட சொல்கின்றனர்.இவ்வாறு விவாதம் நடந்தது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வேளாண் பல்கலை.க்கு 172 புதிய பேராசிரியர்கள்: பணி நியமன உத்தரவுகளை முதல்வர் வழங்கினார்**



தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 172 உதவிப் பேராசிரியர்களுக்கான பணி நியமன உத்தரவுகளை முதல்வர் ஜெயலலிதா வெள்ளிக்கிழமை வழங்கினார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தில் காலியாக உள்ள உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கான அறிவிப்பு கடந்த ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதி வெளியானது. இதற்கு, ஆயிரத்து 850 பேர் விண்ணப்பித்தனர். இதில், பரிசீலனைக்கு பிறகு 948 பேர் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டனர்.

நேர்முகத் தேர்வு கடந்த ஜனவரி 21 முதல் பிப்ரவரி 13 ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் வகுப்பு வாரியாக மொத்தம் 172 தேர்வு செய்யப்பட்டனர். இப்பணியிடங்களுக்கு

தேர்வானவர்களுக்கு பணிநியமன உத்தரவு வழங்கப்பட்டன. முதற்கட்டமாக, ஏழு பேருக்கு தலைமைச் செயலகத்தில் பணிநியமன உத்தரவு வழங்கும் நிகழ்ச்சி

தலைமைச் செயலகத்தில் நடந்தது. இதில், முதல்வர் ஜெயலலிதா புதிதாக பணிநியமனம் பெற்றவர்களுக்கு உத்தரவுகளை வழங்கினார்.

மீதமுள்ள 165 பேருக்கும் பணி நியமன உத்தரவுகள் அன்றைய தினமே வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில், வேளாண் துறை அமைச்சர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, தலைமைச் செயலாளர் மோகன் வர்கீஸ் சுங்கத், தமிழக அரசு ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**3 ஆண்டுகளில் ரூ.12 ஆயிரம் கோடி பயிர்க் கடன்: தமிழக அரசு தகவல்**

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ரூ.12 ஆயிரத்து 66 கோடி பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு வெள்ளிக்கிழமை அவர் அளித்த பதில்:

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் சிறு, குறு விவசாயிகள், குத்தகைதாரர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் 29 லட்சத்து 83 ஆயிரத்து 358 விவசாயிகளுக்கு ரூ.12 ஆயிரத்து 66 கோடி வட்டியில்லாத பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், திமுக ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டு காலத்தில் பயிர்க்கடனாக வழங்கப்பட்டது ரூ.9 ஆயிரத்து 163 கோடியாகும்.

கடந்த 3 ஆண்டுகளில் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 992 பேருக்கு சிறு தொழில் மேற்கொள்ள ரூ.701.27 கோடி பண்ணை சாராக் கடனாக அளிக்கப்பட்டுள்ளது. சிறு வணிகக் கடனாக 4 லட்சத்து 13 ஆயிரத்து 291 பேருக்கு ரூ.394 கோடி வழங்கப்

பட்டுள்ளது.

கூட்டுறவு சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட்டது. அதில், 2 லட்சத்து 4 ஆயிரத்து 938 பேர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றார் செல்லூர் கே.ராஜூ.

**தமிழகம், புதுச்சேரியில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் சனிக்கிழமை ஓரிரு இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சில நேரங்களில் தரைக்காற்று பலமாக வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் நீலகிரி மாவட்டம் தேவலாவில் 60 மி.மீ., ஜி. பஜாரில் 40 மி.மீ. நடுவட்டத்தில் 10 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. வெயில்: தமிழகத்தில் அதிகபட்சமாக வெள்ளிக்கிழமை கடலூர் மற்றும் மதுரையில் 103 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில்

பதிவாகியுள்ளது. மேலும் சென்னை மற்றும் நாகப்பட்டினத்தில் 100 டிகிரி வெயில் பதிவாகி உள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

**சிறுவாணியில் தொடர் மழை**

சிறுவாணி அணைப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

கோவை மாநகரின் குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதில் சிறுவாணி அணையின் பங்கு முக்கியமானது. கடந்த கோடை காலத்தில் மழை பெய்யாததால், அணையின் நீர்மட்டம் மிகக் குறைந்திருந்தது. இதனால் சிறுவாணியை நம்பியுள்ள மாநகர்ப் பகுதியில் குடிநீர் பிரச்னை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் சிறுவாணி அணைப் பகுதியில் கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக கனமழை பெய்து வருகிறது.

வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி சிறுவாணி அணைப் பகுதியில் 27 மி.மீ. மழையும், அடிவாரத்தில் 3 மி.மீ. மழையும் பெய்தது. அணையின் நீர் மட்டம் 7.60 மீட்டராக உள்ளது. சிறுவாணியில் இருந்து மொத்தம் 80 எம்.எல்.டி. தண்ணீர் எடுக்கப்படுவதாக குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அவிநாசியில் பருத்தி வரத்து துவக்கம்: ரூ. 11.58 லட்சத்திற்கு வர்த்தகம்**

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் பருத்தி வரத்து துவங்கியுள்ள நிலையில் புதன்கிழமை ரூ. 11.58 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது .

ஏலத்திற்கு 700 பருத்தி மூட்டைகள் வந்திருந்தன. பருத்தி சீசன் மீண்டும் துவங்கியதையடுத்து, பருத்தி வரத்து சென்ற வாரத்தைவிட 150 மூட்டைகள் அதிகரித்திருந்தன. ஆனால் பருத்தி விலையில் அதிகளவு மாற்றமில்லை.

ஏலத்தில், குவிண்டால் ஒன்றுக்கு, ஆர்.சி.எச். ரகப் பருத்தி ரூ. 4,620 முதல் ரூ. 5,230 வரையிலும், டி.சி.எச். ரகப் பருத்தி பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 4,800 முதல் ரூ. 5,100 வரையிலும், எல்.ஆர்.ஏ. ரகப் பருத்தி குவிண்டாலுக்கு ரூ. 4,800 முதல் ரூ. 5,100 வரையிலும், மட்டரகப் பருத்தி குவிண்டால் ரூ. 2,700 முதல் ரூ. 3,000 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 11.58 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. இதில் அன்னூர், கோபி, சேலம், கிணத்துக்கடவு, செங்கப்பள்ளி, கோபி, சேலம், குன்னத்தூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 70 பருத்தி விவசாயிகளும், 6 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர்.

ஏலம் குறித்து, அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவர் மு.சுப்பிரமணியம் கூறியது:

ரூ. 11.58 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. சென்ற வாரத்தைவிட, கூட்டுறவு சங்க ஏல மையத்துக்கு 550-இல் இருந்து 700 மூட்டைகளாக பருத்தி வரத்து அதிகரித்திருந்தது. விலையில் அதிகளவு மாற்றமில்லை. கோடைப் பருத்திப் பருவ சீசன் மீண்டும் துவங்கியுள்ளதால் பருத்தி வரத்து அதிகரித்து வருகிறது.

**கால்நடைத் தீவன உற்பத்தி ஆலையில் மேலும் 3 கிடங்குகள்**

ஈரோடு கூட்டுறவு கால்நடைத் தீவன உற்பத்தி ஆலையில் கூடுதலாக 3 கிடங்குகளை, காணொளி காட்சி மூலமாக முதல்வர் ஜெயலலிதா வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலமாக இந்த ஆலை இயங்கி வருகிறது. இங்கு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் 100 சதவீத மானியத்துடன் 3,000 மெட்ரிக் டன் தீவன கச்சாப் பொருள்கள் மற்றும் 350 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்ட தீவனம் வைப்பதற்குரிய மூன்று கூடுதல் கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இப் புதிய கிடங்குகளை முதல்வர் ஜெயலலிதா, காணொளி காட்சி மூலமாக வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து, கால்நடைத் தீவன ஆலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொழிலாளர்களுக்கும், பொது மக்களுக்கும், மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் இனிப்பு வழங்கினார்.

இப்போது தீவன உற்பத்தி ஆலையில் மாதம் 2,185 மெட்ரிக் டன் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. புதிய கிடங்குகள் திறக்கப்பட்டுள்ளதால் இந்த உற்பத்தியை 2,700 மெட்ரிக் டன்னாக உயர்த்த முடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் தீவனம், தமிழகம் முழுவதும் உள்ள பால் கூட்டுறவு சங்கங்களுக்கும், அரசு கால்நடைப் பண்ணைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இந் நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத் தலைவர் பி.சி.ராமசாமி, துணைத் தலைவர் வி.எஸ்.சுப்பிரமணியம், ஆவின் பொதுமேலாளர் கே.பி.தேவராஜன், கால்நடைத் தீவன ஆலை பொது மேலாளர் ஏ.பி.குமார் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**கால்நடைத் தீவன உற்பத்தி ஆலையில் மேலும் 3 கிடங்குகள்**

ஈரோடு கூட்டுறவு கால்நடைத் தீவன உற்பத்தி ஆலையில் கூடுதலாக 3 கிடங்குகளை, காணொளி காட்சி மூலமாக முதல்வர் ஜெயலலிதா வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலமாக இந்த ஆலை இயங்கி வருகிறது. இங்கு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் 100 சதவீத மானியத்துடன் 3,000 மெட்ரிக் டன் தீவன கச்சாப் பொருள்கள் மற்றும் 350 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்ட தீவனம் வைப்பதற்குரிய மூன்று கூடுதல் கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இப் புதிய கிடங்குகளை முதல்வர் ஜெயலலிதா, காணொளி காட்சி மூலமாக வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து, கால்நடைத் தீவன ஆலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொழிலாளர்களுக்கும், பொது மக்களுக்கும், மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் இனிப்பு வழங்கினார்.

இப்போது தீவன உற்பத்தி ஆலையில் மாதம் 2,185 மெட்ரிக் டன் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. புதிய கிடங்குகள் திறக்கப்பட்டுள்ளதால் இந்த உற்பத்தியை 2,700 மெட்ரிக் டன்னாக உயர்த்த முடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் தீவனம், தமிழகம் முழுவதும் உள்ள பால் கூட்டுறவு சங்கங்களுக்கும், அரசு கால்நடைப் பண்ணைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இந் நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத் தலைவர் பி.சி.ராமசாமி, துணைத் தலைவர் வி.எஸ்.சுப்பிரமணியம், ஆவின் பொதுமேலாளர் கே.பி.தேவராஜன், கால்நடைத் தீவன ஆலை பொது மேலாளர் ஏ.பி.குமார் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**சோலையாறு அணை நீர்மட்டம் 109 அடியாக உயர்வு**

வால்பாறை பகுதியில் பெய்து வரும் கனமழையால் சோலையாறு அணையின் நீர்மட்டம் ஒரே வாரத்தில் 109 அடியாக உயர்ந்துள்ளது.

வால்பாறை மற்றும் சுற்றியுள்ள எஸ்டேட் பகுதிகளில் கடந்த ஒரு மாத காலமாக பருவமழை பெய்து வருகிறது. கடந்த 10 நாள்களாக இடைவிடாது கனமழை பெய்து வருகிறது. இதனால் ஆறுகளில் வெள்ளம் அதிகரித்து, சோலையாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க துவங்கியது.

கடந்த 15 தினங்களுக்கு முன் 30 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து 100 அடியை தாண்டியது. இந் நிலையில், கடந்த

வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து 2844.91 கனஅடியாக இருந்தது. அணையில் இருந்து 1106.25 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்ட நிலையில், 160 அடி கொள்ளளவு கொண்ட அணையின் நீர்மட்டம் 109 அடியாக உயர்ந்தது. வெள்ளிக்கிழமை காலை முடிவடைந்த நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு. வால்பாறை 0.5 மி.மீ. சோலையாறு அணை 1 மி.மீ. லோயர் நீரார் 3 மி.மீ.

**செண்பகத் தோப்பு அணையை பலப்படுத்த வேண்டும்: குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**

போளூர் அருகே உள்ள செண்பகத் தோப்பு அணையை பலப்படுத்தி, மதகுகளை சீரமைக்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகித்தார் . ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பழனிவேலு மற்றும் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பங்கேற்று விவசாயிகள் பேசுகையில், விவசாயிகளுக்கு இலவசமாக உரம் வழங்க வேண்டும். ஆடிப் பட்டத்துக்குத் தேவையான நெல் உள்ளிட்ட அனைத்து விதைகளையும் உரிய பருவத்தில் கிடைக்கும் வகையில் வேளாண் அலுவலகங்களில் இருப்பு வைத்திருக்க வேண்டும். விவசாயிகளுக்கான தனிநபர் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதற்கான பிரீமியத் தொகையை குறைக்க வேண்டும். வறட்சியை கருத்தில் கொண்டு மின் இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும். போளூர் அருகே உள்ள செண்பகத் தோப்பு அணையைப் பலப்படுத்தி அதன் மதகுகளை சீரமைக்க வேண்டும் என்றனர்.

இதையடுத்துப் பேசிய ஆட்சியர் அ.ஞானசேகரன் விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ஆட்சியர் முன்னிலையில்

விவசாயிகள் வாக்குவாதம்

குறைதீர் கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் பதில் அளித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது, அழகேசன் என்ற விவசாயி குறுக்கிட்டு பேச முற்பட்டார். இதற்கு விவசாயி வேட்டவலம் மணிகண்டன் உள்ளிட்ட சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதையடுத்து விவசாயிகள் மணிகண்டன், அழகேசனுக்கு இடையே கை கலப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டது. இதனால் குறைதீர் கூட்டத்தில் பெரும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

இதையடுத்து ஆட்சியர் அ.ஞானசேகரன் இப் பிரச்னையில் தலையிட்டு விவசாயிகளை அமைதிகாக்குமாறு எச்சரித்தார். இதன் பிறகே விவசாயிகள் வாக்குவாதத்தை கைவிட்டு அமர்ந்தனர்.

**நிலக்கடலைக்கு 50% மானியத்தில் 400 கிலோ ஜிப்சம் உரம்: ஆட்சியர்**

நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50% மானியத்தில் ஹெக்டேருக்கு 400 கிலோ ஜிப்சம் உரம் வழங்கப்படும் என்றார் கரூர் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் மேலும் பேசியது:

கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.2 மீ.மீ. நிகழாண்டில் இந்த மாதம் (ஜூலை) கிடைக்க வேண்டிய மழையளவு 194.3 மி.மீ. ஆனால், இதுவரை 139.8 மி.மீ மட்டுமே கிடைத்துள்ளது.

அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் சம்பா பருவத்துக்கு ஏற்ற நெல்ரக விதைகளான ஐஆர்-20, பிபிடி-5204, ஏடிடி-39, ஏடிடி-43 மற்றும் மேம்படுத்தப்பட்ட வெள்ளைப்பொன்னி ஆகியன 210 மெ.டன் இருப்பில் உள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் நெல் விதைகள் கிலோ ஒன்றுக்கு ரூ.10 மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

துவரை நாற்று விட்டு நடவு செய்யும் திட்டத்தில் 140 ஹெக்டேரில் 50% மானியத்தில் துவரை நடவு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் துவரை விதைகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

துவரைக்கு ஒரு ஹெக்டேருக்கு ரசாயன உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியன ரூ. 7,500 மானியத்தில் வழங்கப்படுகிறது.

சிறுதானிய பயிரான சோளத்துக்கு ஒரு ஹெக்டேரில் செயல்விளக்கத்திடல் அமைக்க ரூ. 3,000 மானியத்தில் ரசாயன உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்பட உள்ளன.

அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் 650 மெ.டன் ஜிப்சம் இருப்பில் உள்ளது. நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50% மானியத்தில் ஹெக்டேருக்கு 400 கிலோ என்ற அளவில் ஜிப்சம் வழங்கப்படும் என்றார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மு. அருணா, வேளாண் இணை இயக்குநர் தெய்வேந்திரன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சந்தானம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகத்தை பயன்படுத்த அழைப்பு**

பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகத்தை விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் தஞ்சாவூர் வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் ஆர். கலியராஜ்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளிட்ட செய்திக்குறிப்பு:

தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 45,000 ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தென்னை விவசாயிகள் கொப்பரை தயாரிக்கவும், சேமித்து வைக்கவும், நல்ல விலைக்கு விற்பனை செய்யவும் தமிழ்நாடு அரசு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் அமைக்கப்பட்டுள்ள தென்னை வணிக வளாகம் பட்டுக்கோட்டையை அடுத்த பொன்னவராயன்கோட்டை கிராமத்தில் செயல்பட்டு வருகிறது.

இங்கு 20-க்கு 20 மீட்டர் அளவுள்ள 12 உலர் களங்கள் உள்ளன. மழை காலத்திலும் தரமான கொப்பரை தயாரிக்க சூரிய ஒளியில் உலர்த்தும் கூடமும் உள்ளது. ஓடு பிரிக்கும் கூடங்கள் 2, விவசாயிகள் பொருள் வைப்பு அறைகள் 10 ஆகியவையும் உள்ளன. இவற்றை விவசாயிகள் இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், விவசாயிகள் தங்கள் இடுபொருள்களை வைத்து விநியோகிக்க 17 இடு பொருள் கடைகளும் இங்கு உள்ளன. இவற்றைப் பயன்படுத்த விரும்பும் விவசாயிகள் உரிய வாடகை ஒப்பந்தம் செய்து கொண்டு பயன் பெறலாம். நாளொன்றுக்கு 500 கிலோ அளவில் எண்ணெய் பிழியும் மினி ஆயில் மில் யூனிட் ஒன்றும் ஜெனரேட்டர் வசதியுடன் இவ்வளாகத்தில் உள்ளது.

தென்னை விளைபொருள் குழு உறுப்பினர்களும் தங்கள் குழு மூலம் மதிப்புக் கூட்டுதல் போன்ற வருவாய் ஈட்டும் தொழில்களுக்கு இந்த வணிக வளாகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார்.

**அசோலா உற்பத்தி செயல்விளக்கம்**

நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் திருச்சி வேளாண் கல்லூரி மாணவிகள் அசோலா உறுபத்தி பற்றி செயல்விளக்கத்தை வியாழக்கிழமை செய்து காட்டினர்.

நிகழ்ச்சிக்கு வேளாண் அறிவியல் நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க. சோழன் தலைமை வகித்தார். உழவியல் பேராசிரியை ச. ஆனந்த கிருஷ்ணவேணி முன்னிலை வகித்தார். இதில் அசோலாவின் நன்மைகள், சிறப்பியல்புகள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்து மாணவிகள் விளக்கமளித்தனர்.

இதில் புரதச் சத்து அதிகம் உள்ளதால் மீன் மற்றும் மாடு, ஆடு, கோழிக்கு ஏற்ற குறைந்த செலுவுத் தீவனமாகவும் இதை பயன்படுத்தலாம் என்று ஆலோசனை வழங்கப்பட்டது.

**செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் ஏலம் தொடக்கம்**

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் வியாழக்கிழமை தொடங்கப்பட்ட ஏலத்தில் 33 மூட்டை சின்ன வெங்காயம் ரூ. 26,043-க்கு விற்பனை செய்யப்பட்டது.

பெரம்பலூர் மாவட்டத்தில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்களது பகுதியிலேயே ஏல முறையில் உரிய விலைக்கு விற்பனை செய்யும் வகையில் செட்டிக்குளத்தில் ரூ. 1.14 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட வெங்காய வணிக வளாகத்தை கடந்த மாதம் 27-ம் தேதி காணொலி காட்சி மூலம் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.

இந்த வளாகத்தில், வியாழக்கிழமை முதல் முறையாக வெங்காயம் ஏல முறையில் விற்பனை தொடங்கப்பட்டது. இதில் 7 வியாபாரிகள், விவசாயிகளிடமிருந்து கிலோ ரூ.15 முதல் ரூ.18 வரை ஏலம் எடுத்தனர். அதன்படி 6 விவசாயிகளின் 33 மூட்டை (1,620 கிலோ) வெங்காயம் ரூ.26,043-க்கு விற்பனையானது.

செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில், வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் வெங்காய ஏல விற்பனை நடைபெற உள்ளதாகவும், இதில் பங்கேற்க விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு எவ்வித கட்டணமும் கிடையாது.

எனவே, பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் விற்பனை மையத்தில் தங்களது வெங்காயத்தை விற்பனை செய்து பயன்பெறலாம் என வேளாண் துறையினர் அறிவித்துள்ளனர்.

**பாபநாசம் அணை நீர்மட்டம் 63.05 அடியாக உயர்வு**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால் வெள்ளிக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 63.05 அடியாக உயர்ந்தது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. வெள்ளிக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1420.14 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 61 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 75 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 58.40 கனஅடியும், குண்டாறு அணைக்கு விநாடிக்கு 10 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு விநாடிக்கு 5 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 1 அடி உயர்ந்து 63.05 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 75.62 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 58.60 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 58.50 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 0.50 அடி உயர்ந்து 69.50 அடியாகவும் இருந்தது.

பாசனத்துக்கு பாபநாசம் அணையில் இருந்து விநாடிக்கு 1,104.75 கனஅடியும், மணிமுத்தாறு, கடனாநதி அணைகளில் இருந்து தலா விநாடிக்கு 75 கனஅடியும், ராமநதி அணையில் இருந்து 40 கனஅடியும், கருப்பாநதி அணை, குண்டாறு

அணைகளில் இருந்து தலா 10 கனஅடியும், அடவிநயினார் அணையில் இருந்து 5 கனஅடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

**விவசாயிகளின் மனுக்களுக்கு ஒரு வாரத்தில் பதில்**

விவசாயிகளின் மனுக்களுக்கு ஒரு வாரத்தில் அதிகாரிகள் பதிலளிக்க வேண்டுமென, திருநெல்வேலியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் ஆட்சியர் மு. கருணாகரன் உத்தரவிட்டார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மாதந்தோறும் 3ஆவது வெள்ளிக்கிழமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதன்படி, வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்துக்கு ஆட்சியர் மு. கருணாகரன் தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குநர் சந்திரசேகரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) தனபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டம் தொடங்கியதும், விவசாயிகள் அனைவரும் எழுந்து, குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் அளிக்கப்படும் மனுக்களுக்கு அதிகாரிகள் மிகவும் காலதாமதமாகப் பதிலளிப்பதோடு, நடவடிக்கையும் எடுப்பதில்லை.

எனவே, இக்கூட்டத்தின் முக்கியத்துவம் குறைந்து வருகிறது. விவசாயிகளின் கோரிக்கைகளை விரைவாக பரிசீலிக்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிடவேண்டும் என்றனர்.

ஆட்சியர் மு. கருணாகரன்: குறைதீர் கூட்டங்களில் அளிக்கும் மனுக்களுக்கு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஒரு வாரத்துக்குள் பதில் அளிப்பதோடு, அதன் நகலை மாவட்ட நிர்வாகத்தின் பார்வைக்கு அனுப்பவேண்டும். இல்லையெனில், உயரதிகாரிகள் மூலம் துறைரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

பின்னர் நடைபெற்ற விவாதத்தில் விவசாயிகள் பேசியதாவது:

ஆர். கசமுத்து: திருந்திய நெல் சாகுபடி முறையில் அரசு இயந்திரத்தின் மூலம் நடவு செய்வோருக்குதான் மானியம் வழங்கப்படுகிறது. நூல் பிடித்து மனிதர்களால் நடவு செய்வோருக்கும் மானியம் வழங்கவேண்டும். ராமநதி, கடனாநதியில் பெருகி வரும் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

செங்கோட்டை விவசாயிகள்: திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை, தென்காசி பகுதிகளில் உள்ள மாந்தோப்புகளில் காற்றின் காரணமாக ஏராளமான மாங்காய்கள் விழுந்தன. இவற்றைப் பாதுகாத்து வைக்க குளிர்பதன கிடங்கு இல்லை. எனவே செங்கோட்டையில் குளிர்பதன கிடங்கு அமைக்கவேண்டும் என்றனர்.

இதற்கு அதிகாரிகள் பதிலளிக்கையில், கடையநல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குளிர்பதன கிடங்கு செயல்பாட்டில் உள்ளது என்றனர். இதற்கு விவசாயிகள் ஆட்சேபம் தெரிவித்ததோடு வருத்தம் தெரிவிக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

ஆட்சியர்: கடையநல்லூர் குளிர்பதன கிடங்கை விவசாயிகளின் பயன்பாட்டுக்குக் கொண்டு வர விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

விவசாயிகள்: செங்கோட்டை பகுதிகளில் உரக்கடைகளில் கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதைத் தடுக்க வேண்டும்.

அதிகாரிகள்: திருநெல்வேலி மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உரங்களை கூடுதல் விலைக்கு விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆட்சியர்: கூடுதல் விலைக்கு உரங்களை விற்பதைத் தடுக்க இம்மாத இறுதிக்குள் அனைத்து கடைகளிலும் விலைப்பட்டியல் வைக்கவேண்டும்.

விவசாயிகள்: கூட்டுறவுச் சங்கங்களில் தனிநபர் கடன்கள் வழங்கப்படுவதில்லை. இதர சில கடன்களுக்கு ஆவணங்களைக் கேட்டு அலைக்கழிக்கிறார்கள். இதுகுறித்து, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர்.

தினத் தந்தி

**திருமானூர் ஒன்றியத்தில் கால்நடை துறைவளர்ச்சி திட்ட பணி களை கலெக்டர் சரவணவேல் ராஜ் பார்வையிட்டு ஆய்வு செய்தார்**.

கலெக்டர் ஆய்வு

அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியத்தில் கால்நடை பராமரிப்புத் துறை யின் திட்டப்பணிகள் நடந்து வருகிறது. இப்பணி களை மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் அரியலூர் கோட் டத்தில் கீழப்பழுவூர் கிராம ஊராட்சியில் திடீர் குப்பம் மற்றும் ஓம்சக்தி கோவில் தெரு பயனாளிகளுக்கு வழங் கப்பட்ட விலையில்லா வெள் ளாடுகளை ஆய்வு செய்து, அந்த ஆடுகள் ஈன்ற குட்டிகள் விவரம் மற்றும் அதனால் அவர்களின் வாழ்க்கை தரம் உயர்ந்ததை கேட்டறிந்தார்.

கீழப்பழுவூர் கிராம ஊராட் சியில் விவசாயிகளின் தீவனப் புல் வயலை ஆய்வு செய்தார். அப்போது புல் சாகுபடி மூலம் கறவை மாடு களுக்கான தீவன செலவு குறைந்துள்ள விவரம் அவருக்கு தெரிவிக் கப்பட்டது.

கோழிப்பண்ணை

கீழப்பழுவூர் கிராமத்தில் பயனாளிகளுக்கு வழங்கப் பட்ட புல் நறுக்கும் கருவி செயல்படுவதை அவர் பார்வையிட்டார். இந்த கருவி மூலமாக புல்லை 1 - 1.5 அளவில் நறுக்கி கால்நடை களுக்கு தீவனமாக அளிப்பதன் மூலம் புல் சேதார மாவது தவிர்க்கப்படுவதுடன் செரி மான தன்மை அதிகரித்து பாலின் அளவு உயர்ந்துள்ளது என பயனாளிகளால் தெரிவிக் கப்பட்டது. மேலும் அக்கிராமத் தில் கோழி அபிவிருத்தி திட்டத் தின் மூலம் அமைக்கப் பட்ட ஒருவரது கறிக்கோழி பண்ணையை கலெக்டர் ஆய்வு செய்து, மொத்த செல வினம், கிடைக்கும் லாபம் போன்ற தகவல்களை கேட் டறிந்தார். பின்னர் அரிய லூர் கோட்டத்தில் ரூ.15 லட்சம் செலவில் கட்டப்பட்டு, கட்டு மானப் பணி முடிந்த நிலையில் உள்ள கீழக் காவட் டாங்குறிச்சி ஊரக கால்நடை மருந்தகத்தை அவர் ஆய்வு செய்தார்.

விலையில்லா மாடுகள்

செம்பியக்குடி கிராமத்தில் வழங்கப்பட்ட விலையில்லா கறவைமாடுகளை அவர் பார்வை யிட்டு ஆய்வு செய்து, புதிதாக கன்றுகள் பிறந்த விவரம், பாலின் அளவு மற்றும் பயனாளிகளின் வருமானம் உயர் ந்த விவரத்தை கேட்டறிந்தார். இதையடுத்து வைத்திய நாத புரம் கிராமத்தில் ஒரு விவசாயி வயலில் அமைந் துள்ள மழைத்தூவியை அவர் பார்வை யிட்டார். வறட்சியில் பாசன நீரின் தேவை இப்புதிய பாசன முறை மூலம் குறைந்துள்ளது பற்றி அவரிடம் எடுத்து கூறப்பட்டது. ஆய்வின்போது மண்டல இணைஇயக்குநர் செல்வ பெரு மாள், உதவி இயக்குனர் பாஸ்கர் மற்றும் கால்நடை மருத்துவர்கள் உட னிருந் தனர்.

அரியலூாில், நவீன மீன் விற்பனை நிலையம் கலெக்டர் திறந்து வைத்தார்

நவீன மீன் விற்பனை நிலையம்

அரியலூாில் உழவர் சந்தை அருகில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் சார்பாக நவீன மீன் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டது. இதன் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு டாப்கோபெட் தலைவர் சேவியர்மனோகரன் முன்னிலை வகித்தார்.

விழாவிற்கு கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமை தாங்கி நவீன மீன் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து முதல் விற்பனையினை தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் தெரிவித்த தாவது:–

மதிப்பூட்டப்பட்ட வகை

இந்த மீன் விற்பனை நிலையம் உள்நாட்டு மீன் விற்பனையினை மேம்படுத்திட ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களுக்கு நல்ல தரமான மீன்கள் காலை முதல் மாலை வரை விற்கப் படும். மேலும், மீன் வறுவல், நண்டு சூப், இறால் ஊறுகாய், கருவாடு ஆகிய மதிப்பூட் டப்பட்ட அனைத்து மீன் வகைகளும் மாலை முதல் இரவு வரை விற்பனை செய்யப் படும் இவ்வாறு அவர் தெரிவித் தார்.

<u>கோவையில் காய்கறி விலை கிடுகிடு உயர்வு தக்காளி கிலோ ரூ.52; பீன்ஸ் கிலோ ரூ.80</u>

கோவையில் காய்கறி விலை கிடுகிடுவென உயர்ந்து உள்ளது. அதிகபட்சமாக தக்காளி கிலோ ரூ.52-க்கும், பீன்ஸ் கிலோ ரூ.80-க்கும் விற்பனையாகிறது.

காய்கறி ரகங்கள்

கோவையில் கடந்த சில வாரங்களாக காய்கறி விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கோவை தியாகி குமரன் மார்க்கெட்டில் நேற்று மொத்த மற்றும் சில்லறையில் விற்பனையான காய்கறி ரகங்கள் விலை விவரம் வருமாறு:-

விலை எவ்வளவு?

தக்காளி கிலோ ரூ.45 முதல் ரூ.52 வரையிலும், சின்ன வெங்காயம் கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரையிலும், பெரிய வெங்காயம் கிலோ ரூ.26 முதல் ரூ.36 வரையிலும், பச்சை மிளகாய் கிலோ ரூ.40 முதல் ரூ.60 வரையிலும், குடை மிளகாய் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், பஜ்ஜி மிளகாய் கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரையிலும் விற்பனையானது.

சேனைக்கிழங்கு கிலோ ரூ.30 முதல் ரூ.36 வரையிலும், உருளைக்கிழங்கு கிலோ ரூ.25 முதல் ரூ.40 வரையிலும், கேரட் கிலோ ரூ.40 முதல் ரூ.56 வரையிலும், பீன்ஸ் கிலோ ரூ.60 முதல் ரூ.80 வரையிலும், சவ்சவ் கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரையிலும், பூசணிக்காய் கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரையிலும், அரசாணிக்காய் கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

காரணம் என்ன?

கோவைக்காய் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், பீட்ரூட் கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரையிலும் கத்தரிக்காய் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், கொத்தவரங்காய் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், முள்ளங்கி கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரையிலும் விற்பனையாகிறது.

இது தொடர்பாக தியாகி குமரன் மார்க்கெட் சங்க பொருளாளர் கார்த்திகேயன் கூறும்போது, மழை மற்றும் காய்கறி உற்பத்தி குறைவால் சற்று விலை உயர்ந்து உள்ளது. இருந்தாலும் எந்த காய்கறிக் கும் தட்டுப்பாடு இல்லை. உற்பத்தி அதிகரிக்கும் போது, காய்கறி விலை படிப்படியாக குறையும் என்றார்.

விழாவில், டாப்கோ பெட் மீன்துறை இணை இயக்குநர் செயலாட்சியர்ந.சந்திரா, மீன் துறை துணை இயக்குநர் (திருச்சி) இளம் வழுதி, வட்டாட்சியர் முருகன், திட்ட அலுவலர் டாப் கோபெட் (பட்டுக் கோட்டை) எஸ்.செல்வராசு, மீன்துறை உதவி இயக்குநர் (அரியலூர்) சிவராமன், நகர்மன்ற உறுப் பினர் சிவஞானம், அரியலூர் நகர கூட்டுறவு வங்கித்தலை வர் நாகராஜ், அரியலூர் வட்ட உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கத்தலைவர் மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பெரும்பள்ளம் அணைக்கட்டு வாய்க்கால் பாசனத்துக்கு பயன்படுத்தப்படுமா? விவசாயிகள் கோரிக்கை**



பெரும்பள்ளம் அணைக்கட்டு வாய்க்கால் பாசனத்துக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

பெரும்பள்ளம் பாசனம்

ஈரோடு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டு வருகின்றன. கீழ் பவானி, காலிங்கராயன், தடப்பள்ளி-அரக்கன்கோட்டை என்று பாசன திட்டங்கள் மாவட்டம் முழுவதும் இருந்தாலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு தலைதூக்க தொடங்கி இருக்கிறது. கீழ் பவானி வாய்க்காலில் ஒரு முறை தண்ணீர் திறந்தால் ஒரு மாதம் குடி தண்ணீர் பற்றாக்குறையை போக்கி விடுவோம், காலிங்கராயன் வாய்க்காலில் ஒரு முறை தண்ணீர் விட்டால் தாகத்தை தீர்த்துக்கொள்வோம் என்று விவசாயிகள் தினமும் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். அதே நேரம் பாசனத்துக்கு தண்ணீர் இருந்தும் பொதுமக்களுக்கு பயன் இல்லாமல் கிடக்கிறது பெரும்பள்ளம் அணை.

ஈரோடு சூரம்பட்டி வலசு பகுதியில் பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பு அணை கட்டப்பட்டு உள்ளது. இந்த அணையில் இருந்து பெரும்பள்ளம் பாசன

வாய்க்கால் என்ற பெயரில் ஒரு கால்வாய் செல்கிறது. முத்தம்பாளையம் வழியாக காசிபாளையம், நாடார் மேடு, லக்காபுரம், பூந்துறை, அறச்சலூர் என்று சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு பாசனம் அளித்த இந்த வாய்க்கால் இன்று கேட்பாரற்று கிடக்கிறது.

ஆக்கிரமிப்பு

அணையின் நிலமையோ மிகவும் பரிதாபமாக உள்ளது. அணையில் தண்ணீர் இருப்பது தெரியாத அளவுக்கு ஆகாயத்தாமரை படர்ந்து கிடக்கிறது. ஒரு துளி தண்ணீர் கூட சூரிய வெளிச்சம் படமுடியாத அளவுக்கு மூடிக்கிடந்தாலும் அணை நிரம்பியே உள்ளது. இங்கிருந்து வாய்க்கால் வழியே சிறிது தூரம் செல்லும் தண்ணீர் ஆக்கிரமிப்புகளால் தடுக்கப்படுகிறது. காசிபாளையம் பகுதி குடியிருப்பு பகுதியாக மாறிவிட்ட பின்னர், இந்த வாய்க்கால் தேவையில்லாத ஒரு இடமாக மாறிவிட்டது. பெரிய குப்பைக்குழியாக மாறியதால் சில இடங்களில் சாக்கடை மட்டுமே ஓடுகிறது. சில இடங்களில் வாய்க்காலை சமமாக்கி குடிசைகளும் போட்டு வைத்திருக்கிறார்கள். லக்காபுரம் பகுதியில்தான் வாய்க்கால் வயல்களை பார்க்கிறது. ஆனால் பல ஆண்டுகளாக இந்த வாய்க்காலில் தண்ணீர் வராததால், வேறு வழிகளில் விவசாயிகள் பாசனம் செய்து பயிர்களை காப்பாற்றுகிறார்கள். அதற்கு அப்பால் துண்டிக்கப்பட்ட வாய்க்கால் ஆங்காங்கே தென்படுகிறது.

பெரும்பள்ளம் அணைக்கட்டு வாய்க்கால் செல்லும் பகுதிகள் அனைத்தும் வறட்சியான பகுதிகள். இங்கு நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது.

இதை மீட்க வேண்டும் என்றால் இந்த வாய்க்காலில் தண்ணீர் விடுவது சிறந்த வழியாக இருக்கும்.

இதுபற்றி கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் செ.நல்லசாமியிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:-

கோரிக்கை

கீழ்பவானி திட்டம் போடப்பட்டபோதே, கீழ்பவானி பாசன வயல்களில் இருந்து கிடைக்கும் கசிவு நீரை சேமித்து அதையும் பாசனத்துக்கு பயன்படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டது. அதன்படி கீழ்பவானி பாசன பகுதிகளில் 34 கசிவு நீர் தடுப்பணைகள் கட்டப்பட்டன. அதில் ஒன்றுதான் பெரும்பள்ளம் அணை. ஏற்கனவே பெரும்பள்ளம் ஓடை ஓடிக்கொண்டு இருந்தாலும், கசிவுநீர் சேரும் இடம் என்பதால் இங்கிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவுக்கு வாய்க்கால் வெட்டப்பட்டது. காமராஜர் காலத்தில் அப்போது எம்.பி.யாக இருந்த எஸ்.கே.பரமசிவம் போன்றவர்கள் போராடி பெற்ற திட்டம் இது. இதன் மூலம் 2 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெற்றது. ஆனால் அதற்கு பின்னர், விளை நிலங்கள் வீடுகளாக மாறியபோது கால்வாயின் தேவை யாருக்கும் இல்லாமல் போனது. இப்போது பாசனப்பகுதி குறைந்து விட்டது. ஆக்கிரமிப்புகள் அதிகரித்து விட்டன. இதுபற்றி மக்களுக்கும் விவசாயிகளுக்கு அப்போது விழிப்புணர்வு இல்லாததால், அப்படி ஒரு வாய்க்கால் இருந்ததையே பலரும் மறந்து விட்டனர். தற்போதைய நிலையில் தண்ணீர் திறந்து விட்டால் அது பாசனத்துக்கு இல்லாவிட்டாலும், இங்கு குடியிருக்கும் பொதுமக்களுக்கு குடிதண்ணீர் தேவைக்கான நிலத்தடி நீராவது உயரும். எனவே அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

இவ்வாறு விவசாயி செ.நல்லசாமி கூறினார்.

நடவடிக்கை

இதுபற்றி பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பிரகலாதன் கூறியதாவது:-

தற்போது இந்த கால்வாயின் மூலம் பாசன நிலங்கள் எதுவும் பயன்பெறும் வாய்ப்பு இல்லை. எனினும் வாய்க்காலில் தண்ணீர் விடும் ஒரு முயற்சியை எடுத்தோம். அப்போது பெரும்பாலான பகுதிகள் ஆக்கிரமிப்பில் இருந்தது தெரியவந்தது. ஆக்கிரமிப்பாளர்கள் மாற்று இடம் கொடுத்தால் ஆக்கிரமிப்பை கைவிடுவதாக கூறுகிறார்கள். அதற்கான பரிந்துரைகள் செய்யப்பட்டு உள்ளன. ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டால் தண்ணீர் விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அணையின் மதகு பழுதடைந்து உள்ளது. கேட்பாரற்று கிடக்கும் அணைக்கட்டு பகுதி ஈரோடு மாவட்டத்தில் ஒரு பகுதியை வளமாக்கும் கனவின் ஒரு திட்டம். ஆனால், இன்று அணையும் வீணாகி, வாய்க்காலும் வீணாகி கிடக்கிறது. இந்த வாய்க்காலில் தண்ணீர் விட்டால் பாசன நிலங்கள் மட்டுமல்ல, அந்த பகுதிகளில் குடியிருக்கும் மக்களின் குடிதண்ணீர் தேவைக்கும் பயன்படும். எனவே இதற்கான நடவடிக்கைகள் அரசும், ஆட்சியாளர்களும் செய்ய வேண்டும் என்பதே இந்த பகுதி பொதுமக்களின் கோரிக்கையாகும்.

காணை பகுதிகளில் குறுவை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்



காணை பகுதிகளில் குறுவை சாகுபடியில் நெல் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தொடர் மழை

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக பொதுமக்களை வெயில் வாட்டி வந்தது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையின் காரணமாக வெயில் ஓரளவு குறைந்து, விவசாய கிணறுகளில் நீர்மட்டம் ஓரளவு உயர்ந் துள்ளது. இந்நிலையில் இதனை பயன்படுத்தி காணை, பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் குறுவை சாகுபடியில் நெல் நடவு பணிகளை தொடங்கி யுள்ளனர்.

குறுவை சாகுபடி

*இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், சென்ற முறை சம்பா பயிர் சாகுபடியில் மழையின்மை காரணமாக குறிப்பிட்ட அளவு லாபம் கிடைக்கவில்லை. இந்நிலை யில் தற்போது மழைக்காலம் தொடங்கியிருப்பதால், தொடர்ந்து மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் குறுவை சாகுபடியை தொடங்கியுள் ளோம். கடந்த முறை*

குறுவை சாகுபடியின்போது 100 கிலோ எடை கொண்ட மூட்டை ஒன்று ரூ.1200-க்கு விற்பனை யானது. தற்போது நெல் விதையின் விலை அதிகமாகி விட்டது. இருந்தபோதும் நெல்லின் விலை குறைவாகவே உள்ளது. தேசிய ஊரக வேலை திட்டத்தில் பணி செய்வதற் காக கிராம மக்கள் சென்று விடுவதால் ஆள் பற்றாக்குறை என்பது மிகுந்து காணப்படு கின்றது. ஒரு நாளைக்கு கூலியாக ரூ.200 பணியாளர் களுக்கு கொடுக்க வேண்டியுள் ளது. இதனால் தற்போது பெரும்பாலும் எந்திரங்கள் மூலம் நடவு செய்து வருகின் றோம். மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பிலும், நெல்லின் விலையில் முன்னேற்றம் காணப்படும் என்ற வகையிலும் சம்பா நடவு பணிகளை ஆர்வமுடன் தொடங்கி யுள்ளோம் என்றார்.

விற்பனை செய்ய, உழவர் மன்றங்களை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளலாம்

புதுக்கோட்டை மாவட் டத்தில் உள்ள விவ சாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்ய உழவர் மன்றங்களை பயன் படுத்தி கொள்ளலாம் என்று கலெக்டர் மனோகரன் வங்கியாளர்கள் கூட்டத் தில் பேசினார்.

வங்கியாளர்கள் கூட்டம்

புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட ரங்கில் வங்கியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத் திற்கு கலெக்டர் மனோகரன் தலைமை தாங்கி சிறப்பாக செயல்பட்ட உழவர் மன்றங்க ளுக்கு விருது மற்றும் பரிசுத் தொகையினை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

*நாடு முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 12-ம் தேதி நபார்டு வங்கியின் தொடக்க விழா கொண்டாடப்பட்டு வருகிறது. நபார்டு வங்கி புதுக்கோட்டை மாவட்டத்தில் 188 கிராம ஊராட்சிகளிலும் உழவர் மன்றங்களை அமைத்து பராமரித்து வருகிறது. இந்த உழவர் மன்றங்களை ஊக்கு விக்கும் வகையில் சிறப்பாக செயல்படும் உழவர் மன்றங்க ளுக்கு ஒவ்வொரு ஆண்டும் நபார்டு வங்கியின் தொடக்க விழா நாளில் விருது மற்றும் பரிசுத்தொகைக்கான காசோலைகளும் வழங்கப் பட்டு வருகிறது.*

*அதனடிப்படையில் புதுக் கோட்டை மாவட்டத்தில் கடந்த ஆண்டு சிறப்பாக செயல்பட்ட அம்மன் உழவர் மன்றம் பெருங்குடி, திருமலை ராயபுரம் உழவர் மன்றம், பணிக்கொண்டான்பட்டி உழவர் மன்றம் மற்றும் பிரபா உழவர் மன்றம் கிள்ளுக் கோட்டை ஆகிய 4 உழவர் மன்றங்களுக்கு நபார்டு வங்கியின் சார்பில் விருது மற்றும் தலா ரூ.1000 ஆயிரம் பரிசுத் தொகைக்கான காசோலைக ளும் வழங்கப்பட்டது.*

*கிராமப்புறங்களில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் குறைந்த விலையில் இடு பொருட்களை வாங்குவதற்கும் புதிய வேளாண் தொழில் நுட்பங்களை செயல்படுத்த வும், குறைந்த வாடகையில் வேளாண் கருவிகள் பெறுவதற் கும் மேலும், உற்பத்தி செய்த பொருட்களை நல்ல விலையில் விற்பனை செய்யவும் இந்த உழவர் மன்றங்களை பயன் படுத்திக்கொள்ள வேண்டு மென்றும், கிராமப்புறங்களில் செயல்படும் அனைத்து உழவர் மன்றங்களும் விவசாயி கள்*

*மற்றும் கிராம முன்னேற்றத் திற்காக மேலும் சிறப்பாக செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.*

*கூட்டத்தில் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) சந்தோஷ்குமார், இணை இயக்குநர் (வேளாண்மை) ஷாஜஹான், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ராமசாமி உள்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

**விவசாய நிலத்திற்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்த காட்டு யானைகள்**

சூளகிரி அருகே விவசாய நிலத்திற்குள் புகுந்த 2 காட்டு யானைகள் அங்கிருந்த பயிர்களை நாசம் செய்தன.

2 காட்டு யானைகள்

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தாலுகாவிற்கு உட்பட்ட வனப்பகுதியிலும், ஊடேதுர்க்கம் காப்பு காட்டிலும் யானைகள் உள்ளன. இந்த யானைகள் அடிக்கடி ஊருக்குள் வந்து விவசாய பயிர்களை நாசம் செய்வது தொடர்ந்து வருகின்றன.

இந்த நிலையில் அஞ்செட்டி அருகே உள்ள வனப்பகுதியில் இருந்து 2 காட்டு யானைகள் கடந்த 2 நாட்களுக்கு முன்பு சானமாவு காப்புகாட்டிற்கு வந்தன. அந்த யானைகள், நேற்று முன்தினம் சூளகிரி அருகே உள்ள போடூர் பள்ளம் காட்டிற்கு வந்தன.

விவசாய பயிர்கள் நாசம்

அவை இரவு போடூர் கிராமத்திற்குள் வந்தன. அங்கு வெங்கடேசப்பா என்ற விவசாயியின் தோட்டத்திற்குள் சென்ற யானைகள், அங்கு 2 ஏக்கரில் பயிரிட்டிருந்த ராகி மற்றும் தக்காளி பயிர்களை தின்றும், கால்களால் மிதித்தும் நாசம் செய்தன. பிறகு நேற்று காலை அந்த 2 யானைகளும் மீண்டும் போடூர்பள்ளம் காட்டிற்கு சென்று விட்டன.

இந்த நிலையில் நேற்று காலை விவசாயி வெங்கடேசப்பா தனது நிலத்திற்கு சென்றார். அங்கு விவசாய பயிர்களை யானைகள் நாசப்படுத்தி இருந்ததை கண்டு கண் கலங்கினார். சூளகிரி அருகே போடூர்பள்ளம் காட்டில் முகாமிட்டுள்ள இந்த 2 யானைகளையும், சானமாவு, சினிகிரிப்பள்ளி வழியாக ஊடேதுர்க்கம் காட்டிற்கு விரட்டிட வனத்துறையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**மாவட்டத்தில் முதன்முறையாக விவசாய நிலத்திற்கு சூரிய மின்சக்தி கட்டமைப்பு:**



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே ரூ.5 லட்சம் மானியத்துடன் விவசாய நிலத்திற்கு சூரிய மின்சக்தி மூலம் தண்ணீர் பாய்ச்சும் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

சூரிய மின் சக்தி

தமிழக அரசின் பசுமைப்புரட்சி திட்டத்தின் கீழ் வேளாண்மை மற்றும் வேளாண் பொறியியல் துறை முலம் சூரிய மின் சக்தியில் விவசாயத்திற்கு பயன்படுத்தும் மோட்டார்களை இயக் கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கான

செலவுத்தொகையில் 20 சதவீதத்தை விவசாயிகள் வழங்க வேண்டும், மீதித்தொகையை மத்திய, மாநில அரசுகள் இணைந்து மானியமாக வழங்குகிறது.

மேலும் விவசாயத்திற்கு பயன்படுத்தும் மோட்டாரை இயக்குவதற்கு சூரிய ஒளியில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் சோலார் பேனல்களையும் அமைத்து தருகிறது. இதன்படி மதுரை மாவட்டத்தில் முதன் முறையாக புதுப்பட்டியை சேர்ந்த விவசாயி பிரபாகரன் அலங்காநல்லூர் அருகே உள்ள செல்லக்கவுண்டன்பட்டியில் உள்ள அவரது விவசாய நிலத்தில் சூரிய சக்தி மின்சாரத்தின் மூலம் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சும் மோட்டாரை இயக்கும் அமைப்பினை ஏற்படுத்தி உள்ளார்.

ரூ.5 லட்சம் மானியம்

இதுகுறித்து பிரபாகரன் கூறியதாவது:-

எனக்கு சொந்தமான 2 ஏக்கர் நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து டீசல் மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சி நெல் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அத்துடன் டீசல் விலை உயர்வு, மின்தட்டுப்பாடு காரணமாக கிணற்று பாசனத்தின் மூலமும் விவசாயம் செய்ய முடியவில்லை.

இதனால் வேளாண்மை மற்றும் வேளாண்பொறியியல் துறை முலம் சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் சோலார் பேனல்கள் அமைத்து அதிலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் முலம் மோட்டார் இயக்கப்படுகிறது. இதனை அமைக்க நான் ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் கொடுத்தேன்.

அரசு தரப்பில் மானியமாக ரூ.5 லட்சம் வழங்கப்பட்டது. இதையடுத்து தற்போது ரூ.6 லட்சம் மதிப்பில் இந்த வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாள் தோறும் சுமார் 12 மணி நேரத்திற்கு மின் மோட்டாரை செயல்படுத்தி விவசாயம் செய்கிறேன்.

**வறட்சியால் நெல் விவசாயம் பாதிப்பு**

**வறட்சியால் 1.17 லட்சம் எக்டேர் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் நந்தகுமார் தெரிவித்தார்.**

**குறைதீர்க்கும் கூட்டம்**

**ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் நந்த குமார் தலைமையில் நடை பெற்றது. மாவட்ட வருவாய் அதிகாரி விசுவநாதன், விவ சாய இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, நேர்முக உதவியாளர் கனகராசன், பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித் தனர். கூட்டத்தில் விவசாயி கள் கூறியதாவது:- மாவட்டத் தில் உள்ள 600 சிறு கண்மாய் களை தூர்வார வேண்டும். கடந்த 2 ஆண்டுகளாக கடும் வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் வறட்சி மாவட்டமாக அறி வித்து நிவாரண வழங்கவேண் டும்.**

**வறட்சி பாதிப்பு குறித்து அரசிடம் எடுத்துக்கூறி கூடு தல் நிவாரணம் கிடைக்க நட வடிக்கை எடுக்க வேண்டும். காவிரி குடிநீர் திட்ட பணி களை அதிகாரிகள்**

**முறையாக பராமரிக்கவில்லை. மாவட் டம் முழுவதும் உள்ள காட்டு கருவேல மரங்களை அகற்ற வேண்டும். மிளகாய் விவசாயி களிடம் கூடுதல் கமிஷன் பெறும் வியாபாரிகள் மீது நட வடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட் டுள்ளதால் வரி வசூல் செய் வதை நிறுத்த வேண்டும். இவ் வாறு அவர்கள் கூறினர்.**

**வறட்சி**

அதனை தொடர்ந்து கலெக்டர் நந்தகுமார் பேசிய தாவது:- ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 17 ஆயிரம் எக்டேரில் நெல் விவசாயம் 50 சதவீதத்துக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை அனுப்பப்பட்டுள் ளது. தேசிய பயிர் காப் பீட்டு நிறுவனத்தினர்31.7.2014 -ந் தேதிக்கு பின்னர் பயிர் பாதிப்பு குறித்து கணக்கிடு வதாக தெரிவித்துள் ளனர். இதன்பின்னர் கணக்கிட்டு அதற்கேற்ப உரிய நிவாரணம் வழங்கப்படும்.

தற்போது வசூலிக்கப் படுவது மகசூல்வரி அல்ல. நிலவரி மட்டும் தான்.மாவட்டத்தில் கடந்த 2012-13ம் ஆண்டில் ரூ.131 கோடியே 41 லட்சம் பயிர் காப்பீடு வந்ததில் ரூ.123 கோடியே 79 லட்சம் வழங் கப்பட்டு விட்டது. மீதி ரூ.7 கோடியே 62 லட்சம் அரசு கணக்கில் திருப்பி செலுத்தப் பட்டுள்ளது. 2013- 14ம் ஆண்டுக்கு ரூ.138 கோடியே 87 லட்சம் வரப் பெற்றதில் ரூ.136 கோடியே 15 லட்சம் வழங்கப்பட்டுவிட்டது. மீத முள்ள ரூ.2 கோடியே 72 லட் சத்தில்

ஆப்பனூரில் கோர்ட்டு தடை உள்ளதால் ரூ.1 கோடியே 39 லட்சம் தவிர மீதமுள்ள தொகை விவசாயி களுக்கு படிப்படியாக வழங் கப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் உள்ள இடங் களில் 63,000 எக்டேரில் உள்ள காட்டு கருவேல மரங்களை அழிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. இது தவிர தனியார் பட்டா இடங் களில் உள்ள கருவேல மரங் களை தனியார் தொண்டு நிறு வனங்கள் மூலம் அகற்ற நட வடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

கருவேலமரம்

தேவிபட்டினம் முதல் கன்னிராஜபுரம் வரை யிலான 90 கிலோ மீட்டர் சாலையில் இருபுறமும் உள்ள கருவேல மரங்கள் அழிக்கப் பட்டு வருகின்றன. இதில் இது வரை 48 கிலோ மீட்டர் தூரம் பணிகள் முடிவடைந்துள்ளது. பொதுமக்கள் விரும்பினால் தங்களது இடங்களில் உள்ள காட்டு கருவேல மரங்களை தொண்டு நிறுவனத்தின் உத வியுடன் அகற்றிக்கொள்ள லாம்.

இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டம் அனவயல் பகு தியை சேர்ந்த விவசாயி ராஜாக்கண்ணு என்பவர், மலை பகுதிகளில் மட்டும் விளையும் மிளகு பயிரை மித மான தட்பவெப்பம் உள்ள இந்த பகுதிகளிலும் தென்னை யின் ஊடுபயிராக பயிரிட்டு குறைந்தளவு தண்ணீரிலும், பூச்சி தாக்குதல் இல்லாமல் நல்ல மகசூல் பெற்று லாபம் சம்பா திக்கலாம் என்று விளக்கி கூறினார்.

தினகரன்

கோவை மாவட்டத்தில் மழை நீரை தேக்கி வைக்க 1400 பண்ணை குட்டைகள்

கோவை, : கோவை மாவட்டத்தில் மழை நீரை தேக்க 1400 பண்ணை குட்டை அமைக்கும் பணி தீவிரமாக நடக்கிறது.

கோவை மாவட்டத்தில் 3.15 லட்சம் எக்டரில் விவசாய நிலப்பரப்பு இருக்கிறது. கடந்த ஆண்டில் 1.71 லட்சம் எக்டரில் விவசாயம் நடந்தது. இதில் சுமார் 40 சதவீத விளைபயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டது. குறிப்பாக 49 ஆயிரம் எக்டரில் தென்னை மரங்கள் காய்ந்து போனது. சிறு தானியங்களும் அதிகளவு வறட்சியால் பாதிக்கப்பட்டது. வறட்சியை தவிர்க்க, மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் பண்ணை குட்டை திட்டம் துவக்கப்பட்டது. கடந்த ஆண்டில், மாவட்ட அளவில் 1180 இடத்தில் பண்ணை குட்டை அமைக்கும் திட்டம் கடந்த ஆண்டில் துவக்கப்பட்டது. ஒரு பண்ணை குட்டை அமைக்க 2 லட்ச ரூபாய் முதல் 3 லட்ச ரூபாய் வரை செலவிடப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் 1200 பண்ணை குட்டைகள் 22 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டது. ஆனால் இந்த குட்டைகளில் மழை நீர் இதுவரை தேங்கவில்லை. வடிகால் எல்லைகளில் நீர் தேங்கும் வகையில் அமைந்த இந்த குட்டைகள் மழை நீருக்காக காத்திருக்கிறது.

நடப்பாண்டில் 1400 பண்ணை குட்டைகள் அமைக்கும் பணி தீவிரமாக நடக்கிறது. 12 ஒன்றியங்களில் நீரோடை, பள்ளங்களில் பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டு வருகிறது. 3 மாதத்தில் பணிகள் முடியும் என

எதிர்பார்க்கப்படுகிறது. பண்ணை குட்டை அமைக்க தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட தொழிலாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

வேளாண்மை துறையினர் அதிகாரி ஒருவர் கூறுகையில், ''1.5 மீட்டர் ஆழத்தில் 15 மீட்டர் நீள, அகலத்தில் பண்ணை குட்டை அமைக்கப்படுகிறது. 180 வேலை திட்டத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக தொழிலாளர்களுக்கு கூலி வழங்கப்படுகிறது. விவசாயிகளும் தங்கள் விளை நிலத்தில் மானிய தொகையில் பண்ணை குட்டை எளிதாக அமைக்கலாம். 50 சென்ட் இடம் இருந்தால் தாழ்வான இடத்தில் பண்ணை குட்டை அமைக்க முடியும். மழை நீர் முழுவதும் இந்த குட்டையில் தேங்கும் வகையில் இந்த குட்டை உருவாக்க முடியும். குட்டையின் அடிப்பாகத்தில் களிமண் போட்டு தளம் அமைக்கலாம். இதன் மூலமாக அதிக நீரை சேமிக்க முடியும். இந்த குட்டையில் இருந்து மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்யலாம். குட்டையில் கெண்டை, ஜிலேபி, கட்லா, ரோகு போன்ற மீன்களை வளர்க்கலாம். ஒரு குட்டையில் பல லட்ச லிட்டர் நீரை தேக்கி வைக்க முடியும். குறைந்தபட்ச மழை பெய்தால் கூட போதும் ஆண்டு முழுவதும் பண்ணை குட்டையை நம்பி விவசாயம் செய்ய முடியும். இதன் மூலமாக விவசாய பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்படுவதை வெகுவாக தவிர்க்க முடியும்,'' என்றனர்.

விவசாயிகளிடம் கெடுபிடி வசூல் இனி இருக்காது

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் தேசிய வங்கி, தனியார் நிதி நிறுவனம் மற்றும் கூட்டுறவுத்துறை வங்கிகளில் கடன் பெற்று உள்ளது சம்பந்தமாக பாரதீய கிசான் சங்க மாநில துணைத் தலைவர் அய்யாக்கண்ணு கொடுத்துள்ள மனுவின் பேரில்,

திருச்சி ஆர்டிஓ அலுவலகத்தில் ஆர்டிஓ பஷீர் தலைமையில் பேச்சுவார்த்தை கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் வரும் 2015ம் ஆண்டு மார்ச் வரை வங்கிகள் விவசாயிகளை வசூல் என்ற பெயரில் எந்தவிதத்திலும் தொந்தரவு செய்ய கூடாது. மேலும் அனைத்து வகை கால்நடைகளும் வாங்க வங்கிகள் கடன் வழங்கி ஊக்குவிக்க வேண்டும் என பாரதிய கிசான் சங்கம் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேலும் வங்கிகள் சார்பில் ஐஓபி முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் மாவட்ட கலெக்டர் தலைமையில் இம்மாதம் 3வது வாரத்தில் நடைபெற உள்ள வங்கியாளர்கள் கூட்டத்தில் இது தொ டர்பாக விவாதித்து முடிவு எடுக்கலாம் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.நிச்சயதார்த்தம் நடந்த 2 நாளில்

ஊராட்சி மன்ற உறுப்பினர்

கத்தியால் குத்திக் கொலைசாலை மறியல்

தமிழ்செல்வன் கொல்லப்பட்டதை அடுத்து உறவினர்கள் மற்றும் நண்பர்கள் 150க்கும் மேற்பட்டோர் திருச்சி அரசு மருத்துவமனை முன் திரண்டனர். போலீசார் சரியான நடவடிக்கை எடுத்திருந்தால் கொலை நடந்திருக்காது என்றும், கொலையாளிகளை உடனே கைது செய்ய கோரியும் திடீர் சாலைமறியல் செய்தனர்.  தகவல் அறிந்த ஸ்ரீரங்கம் உதவி கமிஷனர் கபிலன், உறையூர் இன்ஸ்பெக்டர் சீத்தாராமன் உள்ளிட்ட போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தனர்,.இதையடுத்து சாலை மறியல் விலக்கி கொள்ளப்பட்டது. இதனால் இப்பகுதியில் அரை மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

**பச்சை மிளகாய் விலை கிடு கிடு உயர்வு:**

சேலம், : சேலத்தில் வரத்து குறைந்ததால் பச்சை மிளகாய் விலை கிடு கிடு வென உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் இந்தாண்டு போதுமான அளவு மழை பெய்யாததால் விளைச்சல் பாதித்து அனைத்து காய்கறிகளின் விலையும் உயர்ந்துள்ளது. சேலம் மார்கெட்டிற்கு தலைவாசல், பண்ருட்டி பகுதிகளிலிருந்து அதிகளவிலான பச்சை மிளகாய் வரத்து இருக்கும். ஆனால் அப்பகுதிகளில் போதுமான அளவு மழை பெய்யாததால் விளைச்சல் வெகுவாக பாதித்துள்ளது. சேலம் மார்க்கெட்களில் தற்போது பெங்களூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளிலிருந்து வரும் பச்சை மிளகாய்கள் விற்கப்படுகின்றன. இதனால் வரத்தும் அதிகளவில் குறைந்துள்ளது. வழக்கமாக சேலம் மார்க்கெட்டிற்கு  10 டன் வரும் பச்சை மிளகாய் தற்போது 5 டன் அளவிற்கு குறைந்துள்ளது. இதனால் கடந்த ஒரு மாதத்திற்கு முன் கிலோ ரூ 25 ஆக இருந்த பச்சை மிளகாய் தற்போது ரூ 50 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், 'விளைச்சல் குறைந்து வரத்து குறைவதால் விலையேற்றம் காணப்படுகிறது. இதே நிலை நீடித்தால் கிலோ ரூ 100 வரை செல்ல வாய்ப்புள்ளது. மேலும் அடுத்து வரும் மாதங்களில் முகூர்த்த நாட்கள் வர உள்ளதால் விலை மேலும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மழை பெய்து வரத்து அதிகரித்தால் மட்டுமே விலை குறைய வாய்ப்புள்ள,' என்றனர்.

**கால்நடை தீவனங்களுக்காக ஜிஎன்டி சூப்பர் மார்க்கெட் திறப்பு விழா**

ஈரோடு, : கால்நடைகள் மற்றும் செல்லப்பிராணிகளுக்கான தீவனங்களுக்காக ஈரோட்டில் புதியதாக ஜிஎன்டி பெட் வெட் சூப்பர் மார்க்கெட் திறக்கப்பட்டுள்ளது.

காமதேனு மாட்டுத்தீவனங்களின் சார்பு நிறுவனமான ஜிஎன்டி பெட்வெட் சூப்பர் மார்க்கெட் ஈரோடு இடையன்காட்டுவலசு சின்னமுத்து வீதியில் திறப்பு விழா நேற்று நடந்தது. பாரதி வித்யாபவன் பள்ளி தாளாளர் டாக்டர் ராமகிருஷ்ணன், பெங்களூர் பயோநோவா நிறுவன உரிமையாளர் சுதிர்ஜெயின் ஆகியோர் முதல் விற்பனையை தொடங்கி வைத்தனர். அதனை டாக்டர் கோபால், எம்.ஆர். கலர்லேப் உரிமையாளர் நாராயணன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிறுவனம் குறித்து நிறுவனத்தின் உரிமையாளர்கள் கோபு, திவ்யா ஆகியோர் கூறுகையில், கால்நடைகள் மற்றும் செல்லப்பிராணிகளுக்காக இந்த நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கான மருந்துகள், தீவனங்கள், தாய்லாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கால்சியம் சத்துள்ள உணவுகள், உபகரணங்கள் இங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது. செல்ல நாய்களுக்கான ஷாம்பு, சோப்பு வகைகள், குதிரைகளுக்கான உணவுகள் உள்ளது. கால்நடைகளுக்காக புல் விதைகள், புல் அறுக்கும் இயந்திரங்கள் இங்கு உள்ளது. பால் பண்ணை தொடங்குபவர்களுக்கு அதற்கான ஆலோசனைகளும் இங்கு இலவசமாக வழங்கப்படும். விரைவில் எங்கள் நிறுவனத்தின் சார்பில் பிரான்ஸில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சினை ஊசிகள் ஏபிசி இண்டியா நிறுவனத்தின் மூலமாக கொள்முதல் செய்யவுள்ளோம். சினை ஊசி தேவை என்று போன் செய்தால் 2 மணி நேரத்திலேயே பண்ணைக்கு சென்று கால்நடைகளுக்கு சினை ஊசி போடும் திட்டத்தை செயல்படுத்தவுள்ளோம். செல்ல பிராணிகளுக்கான உணவுகளை போன் செய்தாலே நாங்கள் நேரடியாக வீட்டிற்கே கொண்டு கொடுக்கிறோம். ஜெர்மன் தொழில்நுட்பத்துடன் கூடிய பால் கறவை இயந்திரங்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தனர்.

**வறட்சியிலும் வெற்றிகரமான இயற்கை விவசாயம்:**

ஈரோடு, : வறட்சி காலத்திலும் வெற்றிகரமான இயற்கை விவசாயம் செய்து வெற்றி பெறுவது தொடர்பான கருத்தரங்கம் கோபிசெட்டிபாளையம் சீதா கல்யாண மண்டபத்தில இன்று நடைபெறுகிறது.

ஜெயம் பிராணி நல அறக்கட்டளை சார்பில் இன்று (17ம் தேதி) கோபிசெட்டிபாளையம் சீதா கல்யாண மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கில், வறட்சியிலும் இயற்கை விவசாயம் செழிக்கவும், சிறுதான்ய உபயோக மறுமலர்ச்சியை உருவாக்கவும், இயற்கைக்கான இடுபொருட்கள் தயாரிப்பு முறைகள் குறித்து அறிந்து கொள்ளவும், கால்நடை கழிவுகளிலிருந்து தரமான லாபகரமான ரசாயன கலப்பில்லாத மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு முறைகள் பற்றி அறிந்து கொண்டு பொருளாதார மேம்பாடு அடையவும், மதிப்பூட்டப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துதல் பற்றி அறிந்து கொள்ளவும், அமிர்தகரைசல், மீன் அமினோ அமிலம், மண்புழு உரம் போன்ற பயிர் ஊக்கிகள் தயாரிப்பு முறைகளை அறிந்து கொள்ளவும், கால்நடைகளுக்கான பாரம்பரிய சிகிச்சை முறைகள் பற்றி அறிந்து கொள்ளவும், நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் மூலிகை மசால் உருண்டைகள், மூலிகை குடற்புழு நீக்கம் குறித்த செய்முறை பயிற்சியை பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முகாமில், மைராடா திட்ட ஒருங்கிணைப்பாளர் அழகேசன் இயற்கை விவசாயத்தில் கேவிகேயின் பங்கு என்ற தலைப்பிலும், வறட்சியிலும் சிறுதானியம் அமோக விளைச்சல் என்ற தலைப்பில் டாக்டர் நிர்மலா குமாரியும், கால்நடை வளர்ப்பு லாபகரமான தொழில் என்ற தலைப்பில் டாக்டர் காசிபிச்சை, இயற்கை விவசாய செழிப்பில் ஊடகங்களின் பங்கு என்ற தலைப்பிலும், கால்நடை

கழிவுகளில் மதிப்பூட்ட பொருட்கள் என்ற தலைப்பிலும், கால்நடைகளுக்கு பாரம்பரிய சிகிச்சை பயிற்சி என்ற தலைப்புகளில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

**மாட்டு சந்தையில் வெளிமாநில வியாபாரிகள் குவிந்தனர் 90 சதவீத மாடுகள் விற்பனை**

ஈரோடு, : ஈரோடு மாட்டு சந்தைக்கு வெளிமாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள் அதிக அளவில் வந்திருந்ததால் மாடுகள் விற்பனை அதிகரித்தது.

ஈரோடு கருங்கல்பாளையம் செக்போஸ்ட் பகுதியில் மாட்டு சந்தை செயல்பட்டு வருகிறது. இந்த மாட்டு சந்தை கமலா நகர் பகுதியில் இருந்து வேறு பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதால் போக்குவரத்து இடையூரின்றி மாடுகளை வாங்கி செல்வதற்காக அதிக அளவில் வியாபாரிகள் வர தொடங்கியுள்ளனர். நேற்று காலை நடந்த மாட்டு சந்தைக்கு மாடுகளை விற்ப னை செய்வதற்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் வந்திருந்தனர்.

அதே போல் மாடு களை வாங்கி செல்வதற்காக வெளி மாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள் அதிகமாக வந்ததால் மாடு களின் விற்பனையும் அதிகரித்தது.

நேற்று நடந்த மாட்டு சந்தைக்கு 500 பசுமாடுகளும், 400 எருமைமாடுகளும் விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வந்தனர். இதில், பசுமாடுகள் 16 ஆயிரம் ரூபாய் முதல் 33 ஆயிரம் ரூபாய் வரையிலும், எருமைமாடுகள் 18 ஆயிரம் ரூபாயில் இருந்து 34 ஆயிரம் ரூபாய் வரையிலும் இருந்தது.

வெளிமாநிலங்கள் மட்டுமின்றி தமிழகத்தை சேர்ந்த வியாபாரிகளும் மாடுகளை வாங்க வந்ததால் 90 சதவீதம் மாடுகள் விற்பனையானது. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், தற்போது மாடுகளுக்கு நல்ல விலை கிடைத்து வருவதால் மாடு களை விற்பனை செய்வதற்காக இங்கு கொண்டு வந்துள்ளோம்.

வழக்கமாக கர்நாடகா, ஆந்திரா, கேரளா மாநிலங்களில் இருந்து தான் வியாபாரிகள் வருகிறார்கள். ஆனால், தற்போது கோவா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இருந்தும் வியாபாரிகள் மாடுகளை வாங்க வருவதால் விற்பனை அதிகமாக உள்ளது. தொ டர்ந்து வரும் வாரங்களிலும் விற்பனை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்



பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்த விவசாயி தன் வயலில் அறுவடை செய்து களத்தில் வைத்திருந்த பயிர், புயல் அல்லது மழை காரணமாக அழிய நேரிட்டால் அடுத்த 48 மணி நேரத்துக்குள் பயிர் காப்பீட்டு அலுவலகத்துக்கு தெரியப்படுத்த வேண்டும். ஏற்பட்ட சேதத்துக்கு ஏற்ப இழப்பீடு கிடைக்கும்.

பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்துள்ள ஒரு விவசாயி, தன் வயலில் சாகுபடி பணிகளைத் தொடங்கிய பிறகு, போதுமான மழை இல்லாதது அல்லது அதிக மழை காரணமாக விதைப்பு அல்லது நடவுப் பணியைத் தொடர முடியாமல் போனால், பயிர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டுத் தொகை வழங்கும்.

அதிக மழை அல்லது அதிக வறட்சி அல்லது பிற இயற்கை சீற்றங்களால் பயிர் சாகுபடி பாதித்து, மகசூல் பாதிப்பு 50 சதவீதத்துக்கும் மேல் இருக்கும் என தெரிய வந்தால், 25 சதவீத காப்பீட்டுத் தொகை முதலில் வழங்கப்படும். மகசூல் இழப்பீடு பற்றி துல்லியமாக இறுதி மதிப்பீடு செய்யப்பட்ட பிறகு மீதி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

இதற்கு முன்னர் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. அந்தத் திட்டத்தின்படி விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய காப்பீட்டுத் தொகையை மத்திய, மாநில அரசுகள் வழங்கி வந்தன.

இந்த ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் மேம்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் அமலுக்கு வந்துள்ளது. இந்தத் திட்டத்தின்படி விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய காப்பீட்டுத் தொகை முழுவதையும் தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனமே வழங்கிட வேண்டும்.

## எள் விலை முன்னறிவிப்பு



தமிழகத்தில் ஆடிப்பட்டத்தில் பயிர் செய்யப்படும் எள்ளுக்கு என்ன விலை கிடைக்கும் என்பது குறித்து திருச்சியில் உள்ள வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் முன்னறிவிப்பு செய்துள்ளது. இது குறித்து அந்த மையம் வெளியிட்டுள்ள செய்தி:

இந்தியாவில் எள் ஒரு முக்கியமான எண்ணெய் வித்துப் பயிராகும். இந்த பயிர்கள் ஆடிப்பட்டத்தில் பயிரிடப்படுகிறது. மேலும், இதன் உற்பத்தி பருவநிலையைப் பொருத்ததாகும். உலக அளவில் 2011-12-ம் ஆண்டில் 78.97 லட்சம் ஹெக்டேரில் எள் பயிரிடப்பட்டது. இதன் உற்பத்தி 40.36 லட்சம் டன்களாகும்.

இந்தியாவில் 2012-13-ம் ஆண்டு கரீப் பருவத்தில் எள் உற்பத்தி 3.40 லட்சம் டன்களாகும். இது 2013-14ம் ஆண்டில் 3.50 லட்சம் டன்களாக உயர்ந்தது. தமிழகத்தில் 2011-12-ம் ஆண்டில் எள் 43,000 ஹெக்டேரில் பயிரிடப்பட்டு 26,000 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் ஈரோடு, கரூர், சேலம், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருப்பூர், புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகியவை எள் பயிரிடப்படும் முக்கியமான மாவட்டங்களாகும்.

தமிழகத்தில் பொதுவாக எள் பயிர் இரண்டு பருவங்களில் பயிரிடப்படுகிறது. தைப்பட்டம் (ஜனவரி - பிப்ரவரி) மற்றும் ஆடிப்பட்டம் (ஜூலை- ஆகஸ்ட்) ஆகிய மாதங்களில் பயிரிடப்படுகிறது. பொதுவாக ஜூலை - ஆகஸ்டில் விதைக்கப்படும் எள் அக்டோபர் முதல் டிசம்பர் வரை சந்தைக்கு வருகிறது.

மேலும், தைப்பட்டத்தில் விதைக்கப்படும் எள் மார்ச் - ஏப்ரல் ஆகிய மாதங்களில் சந்தைக்கு வருகிறது. சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 14 ஆண்டுகள் நிலவிய சிவப்பு எள் விலைகளை ஆராயப்பட்டதில் எள் அறுவடை செய்யப்படும் அக்டோபர் முதல் நவம்பர் மாதங்களில் ஒரு குவிண்டாலுக்கு ரூ.8,500 முதல் ரூ.8,700 வரை விலை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை முன்னறிவிப்பின் அடிப்படையில் விவசாயிகள் எள் சாகுபடி தொடர்பான முடிவுகளை எடுக்கலாம் என அந்த மையம் கூறியுள்ளது.

மேலும் விவரங்கள் அறிய 94435 93971 என்ற செல்போன் எண்ணிலோ அல்லது 0431 2422142 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

**இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில்**

மருத்துவம், பல் மருத்துவம், பொறியியல் ஆகிய தொழிற்படிப்புகள் போல வேளாண் ஆராய்ச்சி படிப்புக்கும் இன்று முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. இந்தப் படிப்பில் படிக்கவும் மாணவர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். மேற்கூறிய படிப்புகளுக்கு அங்கீகார கவுன்சில்கள் செயல்பட்டு வருவது போல, வேளாண்

ஆராய்ச்சி படிப்புக்கும் தனி கவுன்சில் உள்ளது. அது, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில்.

மத்திய அரசின் வேளாண் அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தன்னாட்சி பெற்ற அமைப்பு இது. இதற்கு முன்னர் இக்குழுமம், உயர் அதிகாரம் படைத்த ஆய்வுக் குழுமமாகவே இருந்தது. 1929-ம் ஆண்டில் சமூகப் பதிவுச் சட்டத்தின் கீழ் இது பதிவு செய்யப்பட்டு செயல்படத் தொடங்கியது. வேளாண் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்துச் செயல்படுவதற்கான தலைமை அமைப்பாகத் தற்போது இந்த அமைப்பு இயங்கி வருகிறது. இதன் தலைமையகம் டெல்லியில் உள்ளது. இதன் தலைவர் மத்திய வேளாண் துறை அமைச்சர்.

நாடு முழுவதும் 49 வேளாண் ஆராய்ச்சி கல்வி நிறுவனங்கள், 4 நிகர் நிலை பல்கலைக்கழங்கள், 17 தேசிய ஆராய்ச்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கவுன்சிலின் கீழ் தோட்டக்கலை, மீன்வளம், பால்வளம் மற்றும் விலங்கியல் துறைகள் செயல்படுகின்றன. இந்த துறைகளை ஒருங்கிணைக்கும் அமைப்பாக இது செயல்படுகிறது.

அகில இந்திய அளவில் வேளாண் கல்வி நிறுவனங்களில் உள்ள 15 சதவீத இடங்களைப் பூர்த்தி செய்வதற்கான அகில இந்திய வேளாண் நுழைவுத் தேர்வை இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலே நடத்துகிறது. இக்கவுன்சில் பற்றிய விவரங்களை www.icar.org.in என்ற இணையதளத்தில் பார்க்கலாம்.